


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 269 11.05.2026 திங்கள்கிழமை

Chennai Volume: 01 Issue: 269 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

திங்கள்ழமை
(11–05–2026)
பராபவ ஆண்டு, சித்திரை–28

பிறை: தேய்பிறை

திதி
நவமி காலை 11.08 வரை
பிறகு தசமி

நட்சத்திரம்:
சதயம் இரவு 9.28 வரை பிறகு
பூரட்டாதி

யோகம்
சித்த/ மரண யோகம்

ராகுகாலம்
காலை 7.30–9.00 மணி.

எமகண்டம்
காலை 10.30–12.00 மணி

சூலம் – கிழக்கு

நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 3–4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | ஈகை |
| மிதுனம் | ஆக்கம் |
| கடகம் | வெற்றி |
| சிம்மம் | நலம் |
| கன்னி | பெருமை |
| துலாம் | போட்டி |
| விருச்சிகம் | தனம் |
| தனுசு | உயர்வு |
| மகரம் | இரக்கம் |
| கும்பம் | சிந்தனை |
| மீனம் | மாற்றம் |

## தமிழ்நாட்டின் 13–வது முதலமைச்சராக
# பதவியேற்றார் தவெக தலைவர் விஜய்


**சென்னை, மே 11:**

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் 108 கட்சியாக உருவெடுத்தது. எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்க வில்லை. இதில் விஜய் இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் பெரம்பூர், திருச்சி கிழக்கு என 2 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளார். இதில் ஒன்றை ராஜினாமா செய்ய வேண்டி இருப்பதால் த.வெ.க.வின் பலம் 107 ஆக இருக்கிறது.

ஆனால் ஆட்சி அமைப் பதற்கு 118 இடங்கள் தேவை. எனவே த.வெ.க., தி.மு.க. கூட்டணி கட்சிகளின் ஆதரவை பெற்று ஆட்சி அமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டது. இதில் காங்கிரஸ் முதல் கட்சியாக விஜய்க்கு ஆதரவு தெரிவித்ததுடன், அமைச்சரவையிலும் இடம்பெறுவோம் என்று தெரிவித்தது. அந்த கட்சிக்கு 5 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர்.

இந்த ஆதரவு கடிதத்துடன் கவர்னர் அர்லேகரை சந்தித்து, ஆட்சி அமைக்க 2 முறை உரிமை கோரினார். ஆனால் போதிய பெரும்பான்மை இல்லை என்று கவர்னர் அனுமதி அளிக்கவில்லை. இதனால்

### தமிழக ஆளுநர் அர்லேகர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்




விஜய் பதவி ஏற்பதில் இழுபறி ஏற்பட்டது. இதையடுத்து நீண்ட இழுபறிக்கு பின்னர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, விசிக, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சிகள் தவெகவுக்கு ஆதரவு அளித்தது.

இந்த ஆதரவின் மூலம் த.வெ.க.வின் பலம் 120 ஆக உயர்ந்தது. இது பெரும்பான்மைக்கு தேவையான இடங்களை தாண்டிய எண்ணிக்கையாகும். இதனைதொடர்ந்து த.வெ.க. தலைவர் விஜய் நேற்று தமிழக பொறுப்பு கவர்னர் ராஜேந்திர அர்லேகரை நேரில் சந்தித்து, தமிழகத்தில் ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அப்போது, பெரும்பான்மைக்குதேவையான எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு கடிதத்தை வழங்கினார். அதனை ஏற்றுக்கொண்ட பொறுப்பு கவர்னர், த.வெ.க. தலைவர் விஜய் தலைமையிலான அரசு பதவியேற்க அழைப்பு விடுத்துள்ளார்.

அதன்படி, சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் பதவியேற்பு விழா இன்று நடைபெற்றது. இதில், த.வெ.க. தலைவர் விஜய் "ஜோசப் விஜய் எனும் நான்" என கூறி தமிழக முதல்-அமைச்சராக பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு கவர்னர் அர்லேகர், பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இதன்மூலம் தமிழ்நாட்டின் 13-வது முதல்-அமைச்சர் தவெக தலைவர் விஜய் ஆவர். அவருடன் புஸ்ஸி ஆனந்த், செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார், அருண்ராஜ் உள்பட 10 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

விஜய் பதவியேற்பு விழாவில் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தவெக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



### 9 அமைச்சர்கள் பதவியேற்பு

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை 10 மணியளவில் வந்தே மாதரம் பாடல் இசைக்க பதவியேற்பு விழா தொடங்கியது. பின்னர் தேசிய கீதம் பாடப்பட்டது, 3-வதாகவே தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டது.

இதனையடுத்து தமிழகத்தின் 18-வது முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சி.ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

விஜய்யை தொடர்ந்து 9 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர். தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி. அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ்மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்டோருக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்புக்குப் பிறகு அமைச்சர்கள் அனைவருக்கும் முதல்வர் விஜய் கைக்குலுக்கி வாழ்த்து தெரிவித்தார்.

## 37 அதிமுக எம்எல்ஏக்கள் தவெகவுக்கு ஆதரவு

**சென்னை, மே 11:**

அதிமுகவின் முக்கியப் புள்ளிகளான சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி மற்றும் சி.விஜயபாஸ்கர் தலைமையில் 37 சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழக வெற்றிக் கழகத்திற்கு (தவெக) ஆதரவு அளிக்க முன்வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் காலத்திற்குப் பிறகு 1987-லும், ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு 2017-லும் அதிமுக சந்தித்த பிளவு போன்றதொரு சூழல் தற்போது மீண்டும் உருவாகியுள்ளது. அதிமுகவின் மொத்தமுள்ள 47 சட்டமன்ற உறுப்பினர்களில், மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமானோர் (35 பேர்) தவெகவுக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் அதிமுக இரண்டாக உடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

சட்டவிதிகளின்படி, ஒரு கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் தனியாகப் பிரிந்து சென்றால், அவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டம் பாயாது. அந்த 37 உறுப்பினர்களே "உண்மையான அதிமுக" எனக் கருதப்படவும் வாய்ப்புள்ளது. இதன் மூலம் அவர்கள் தங்கள் பதவியை இழக்காமல் தவெக ஆட்சியமைக்கப் பலம் சேர்க்க முடியும்.

இந்த 35 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுக் கடிதங்களையும் கவர்னரிடம் சமர்ப்பிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் தமிழக அரசியல் களம் நொடிக்குநொடி எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தி வருகிறது.


## "தவறு செய்ய மாட்டேன்.. செய்யவும் விடமாட்டேன்": முதல்-அமைச்சர் விஜய் உறுதி

**சென்னை, மே 11:**

முதல்-அமைச்சராக பதவி ஏற்றுக்கொண்ட பின்னர் விஜய் மக்கள் மத்தியில் பேசியதாவது;

"என் நெஞ்சில் குடியிருக்கும் அனைவருக்கும் எனது வணக்கம். சினிமாவில் கஷ்டப்பட்டு வெற்றி பெற வேண்டுமென இருந்த சாதாரண உதவி இயக்குநருக்கு பிறந்த பிள்ளைதான் நான். வறுமை, பசி எனக்கும் தெரியும். நான் ஒன்றும் பெரிய மன்னர் பரம்பரையில் இருந்து வந்தவன் கிடையாது. உங்களில் ஒருவன். உங்கள் பிள்ளை, உங்கள் அண்ணன், உங்கள் தம்பி மாதிரி தான் நான் உணர்கிறேன். நீங்களும் அப்படி நினைப்பதால் தான் என்னை இங்கு நிற்க வைத்திருக்கிறீர்கள்.

உங்களுக்காக நன்றிக்கடன் செலுத்த வந்த என்னை, 'நாங்கள் இருக்கிறோம்.. பார்த்துக்கலாம்' என அன்பாக, உறவாக ஏத்துக்கொண்டீர்கள். எனக்காக கூட நின்ற உங்களுக்கும் கஷ்டங்கள், அவமானங்களை பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் என் கூடவே நின்று இன்று 'சி.ஜோசப் விஜய் எனும் நான்' என்பதை



உண்மையாக்கி உள்ளீர்கள். எது சாத்தியமோ அதுமட்டும்தான் நான் செய்வேன். அப்போ சாத்தியம் இல்லாத்தை செய்ய மாட்டியா? என நீங்கள் கேள்வி கேட்பது தெரிகிறது. இத்தனை கோடி மக்கள் என்னுடன் இருக்கும்போது எது வந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் என்ற உறுதி எனக்கு உள்ளது.

தமிழகத்தின் நிதிநிலை மோசமாக உள்ளது. 10 லட்சம் கோடி கடன் தமிழ்நாட்டின் கடனாக உள்ளது. தூக்க முடியாத சுமையை ஏற்றி வைத்துள்ளார்கள். என்ன இருக்கு, எது இல்லை என்பதை உள்ளே போய் பார்த்தால்தான் தெரியும். அதனை ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிட உள்ளேன். அதன் பின்னர் முன்னோக்கி செல்ல உள்ளேன்.

இவ்வளவு பெரிய பொறுப்பை எனக்கு கொடுத்துள்ளீர்கள். அதேபோல எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். பெண்கள் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பேன். போதைப்பொருளைஒழிப்பேன். நண்பர்களாக இருந்தாலும், எதிரிகளாக இருந்தாலும் 8 கோடி மக்களும் என் மக்கள்தான்.

ரேஷன், மருத்துவம், குடிநீர், சாலை வசதிகளில் முழு கவனம் செலுத்துவேன். மக்கள் பணத்தில் ஒரு பைசவும் தொட மாட்டேன். விஜய் தப்பு பன்ன மாட்டான். தப்பு பன்னவும் விடமாட்டான். என் கூட இருப்பர்களாக இருந்தாலும் சரி. நாம் ஜெயித்துவிட்டோம். ஒரு ஆட்டம் ஆடி பார்த்துவிடலாம் என நினைப்பர்வர்கள் இப்பவே சென்றுவிடுங்கள். இங்கு ஒரே பவர் செண்ட்டர்தான்.

பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மீனவர்கள் என அனைவரும் நமது அரசில் நல்லா இருப்போம். சிறுபாண்மை சகோதரர்களுக்காக நமது அரசு கூடவே இருக்கும். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி.

விஜய்யின் குட்டி நண்பா, நன்பிகளுக்கு நன்றிகள். உங்களுக்காக அனைத்து நல்ல விஷயங்களையும் விஜய் மாமா செய்து கொடுப்பான். முக்கியமாக தமிழக வெற்றிக்கழக தோழர்களுக்கு எனது நன்றிகள். எனக்கு ஆதரவளித்த அனைத்து கட்சியினருக்கும் நன்றி. இது ஒரு புதிய தொடக்கம். மீண்டும் மீண்டும் சந்திப்போம். வணக்கம்."

இவ்வாறு அவர் பேசினார்.


## 200 யூனிட் மின்சாரம் இலவசம்! விஜய் முதல் கையொப்பம்!

**சென்னை, மே 11:**

மக்கள் முன்னிலையில் முக்கிய கோப்புகளில் தமிழக முதல்வர் விஜய் கையொப்பமிட்டார்.

தமிழகத்தின் 13-ஆவது முதல்வராக தவெக தலைவர் சி. ஜோசப் விஜய் இன்று(மே 10) காலை 10.15 மணியளவில் பதவியேற்றார். தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் விஜய்க்கு முதல்வராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அதன்பின்னர், 9 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, மக்கள் முன்னிலையில் முதல்வர் விஜய் 3 முக்கிய கோப்புகளில் கையொப்பமிட்டார். வீடுகளில் இரு மாதங்களுக்கு 500 யூனிட் வரை மின்சாரம் நுகர்வோருக்கு, 200 யூனிட் வரை மின்சாரம் இலவசம் என்ற கோப்பில் முதல் கையொப்பமிட்டார் விஜய்.



பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை என்ற புதியதொரு திட்டத்தையும் தொடங்கி வைத்து அதற்கான ஆணையில் அவர் கையொப்பமிட்டார். போதைப் பொருள் புழக்கத்தை தடுக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் போதைப் பொருள் தடுப்புப் படை திட்டம் என்ற கோப்பிலும் கையொப்பமிட்டார். அதனைத்தொடர்ந்து, மக்களிடையே உரையாற்றினார்.

## "திமுகவுக்கே துரோகம் இழைத்த கட்சி காங்கிரஸ்" - பிரதமர் மோடி

**பெங்களூரு, மே 11:**

வாழும் கலை அமைப்பின் 45வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக கர்நாடகா வந்த பிரதமர் நரேந்திர மோடி, அங்கு கூடி இருந்த பாஜக தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது அவர், எந்த ஒரு மாநிலத்திலும் காங்கிரஸ் அரசு இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்ததில்லை. ஆட்சி அமைத்த சில மாதங்களிலேயே காங்கிரஸ் கட்சிக்கு எதிராக மக்கள் மத்தியில் அதிருப்தி எழத் தொடங்கிவிடுகிறது. இதற்குக்



காரணம், துரோகம் இழைக்க மட்டுமே காங்கிரஸ் கட்சிக்குத் தெரியும். அவர்கள் பொய்யர்கள்; அவர்களின் வாக்குறுதிகளும் போலியானவை. காங்கிரஸ் கட்சியின் அதிகாரப் புத்தகத்தில் நிர்வாகம் என்ற அத்தியாயம் அறவே இல்லை.

தமிழ்நாட்டில் கடந்த 25-30 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சிக்கும் திமுகவுக்கும் இடையே மிக நெருக்கமான உறவு இருந்து வருகிறது. திமுகவுடனான இந்த கூட்டணிதான் நெருக்கடியான தருணங்கள் பலவற்றில் இருந்த காங்கிரஸ் கட்சியை மீண்டும் மீண்டும் மீட்டெடுத்திருக்கிறது. 2014-ம் ஆண்டுக்கு முன் அவர்கள் 10 ஆண்டுகள் நடத்திய ஆட்சி, திமுகவின் துணையால் மட்டுமே நிலைத்திருந்தது.

25-30 ஆண்டுகளாக தங்களோடு மிக நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருந்த திமுகவை; காங்கிரஸ் கட்சியின் நலனுக்காக ஒவ்வொரு கணமும் உழைத்த அந்த திமுகவை; அதிகார ஆட்டம் வேறு திசைக்கு திரும்பிய உடனேயே அதிகார வெறிபிடித்த காங்கிரஸ் கட்சி தனது பதவி ஆசை காரணமாக கிடைத்த முதல் வாய்ப்பிலேயே திமுகவின் முதுகில் குத்திவிட்டது. நீண்டகாலக் கூட்டணி கட்சியான திமுகவுக்கு துரோகம் இழைத்துள்ளது. அரசியல் சூழல்கள் மாறும்போதெல்லாம் அக்கட்சி தனது சொந்த கூட்டணி கட்சிகளுக்கே எதிராக திரும்பிவிடுகிறது என்றார்.



## பெரியார் திடலில் முதலமைச்சர் விஜய் கி.வீரமணியுடன் சந்திப்பு



**சென்னை, மே 11:** சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் திடலுக்கு முதலமைச்சர் விஜய் வருகை தந்துள்ளார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியை நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி பூங்கொடுத்து கொடுத்தார். பதிலுக்கு கி.வீரமணியும் முதலமைச்சர் விஜய்க்கும் பொன்னாடை போர்த்தி புத்தகத்தை நினைவு பரிசாக வழங்கினார்.

இதனை தொடர்ந்து சிறிது நேரம், கி.வீரமணியுடன் முதலமைச்சர் விஜய் கலந்துரையாடினார்.

பெரியார் அருங்காட்சியகத்தை முதலமைச்சர் விஜய் பார்வையிட்டார். இதன்பின், பெரியார் நினைவிடத்தில் முதலமைச்சர் விஜய் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

## இலவச மின்சாரம்... யாருக்கு எத்தனை யூனிட்கள் இலவசம்? தமிழ்நாடு அரசு விளக்கம்

**சென்னை, மே 11:** தமிழ்நாட்டில் புதிதாகப் பதவியேற்றுள்ள முதலமைச்சர் விஜய், இரு மாதங்களுக்கு 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கான கோப்பில் தனது முதல் கையெழுத்தை இட்டுள்ளார். இத்திட்டத்தில் பொதுமக்களுக்கு பல்வேறு சந்தேகங்கள் நிலவிவந்தது. இந்நிலையில் இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு விளக்கம் அளித்துள்ளது.



அதன்படி இரு மாதங்களுக்கு மொத்தம் 500 யூனிட்டுகளுக்குள் மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு மட்டுமே இந்த 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும். 500 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கு இந்த 200 யூனிட் இலவசச் சலுகை பொருந்தாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாறாக அவர்களுக்கு 500 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தினால் 100 யூனிட் மின்சாரம் இலவசம் என்ற பழையை நடைமுறையே தொடரும்.

இதற்கு முன்பு தமிழ்நாட்டில் அனைத்து வீடுகளுக்கும் முதல் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## தொடங்கிய அதிகாரிகள் மாற்றம் முதலமைச்சரின் முதன்மை செயலராக செந்தில்குமார் ஐ.ஏ.எஸ். நியமனம்!



**சென்னை, மே 11:** தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, இன்று முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். புதிய அரசு அமைந்துள்ள நிலையில் நிர்வாகரீதியாக மாற்றங்கள் எடுக்கப்படும்.

அந்தவகையில் தற்போது முதலமைச்சர் விஜய்யின் முதன்மை செயலாளராக செந்தில்குமார் ஐ.ஏ.எஸ். நியமனம் செய்யப்பட்டுள்ளார். சுகாதாரத்துறை செயலராக இருந்தவர் செந்தில்குமார். தற்போது அவர் முதன்மை செயலராக மாற்றப்பட்டுள்ளார்.

ஆதிதிராவிடர் நலத்துறை செயலராக இருந்த லட்சுமி பிரியா விஜய்யின் தனிச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனைத்தொடர்ந்து அடுத்தடுத்து அதிகாரிகள் மாற்றம் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## "தவறுகளை அனுமதிக்க மாட்டேன் என முதல்வர் விஜய் அறிவித்தது ஒரு நல்ல அறிகுறி" – சகாயம்



**சென்னை, மே 11:** சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று காலை நடந்த நிகழ்ச்சியில், தமிழகத்தின் முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சகாயம், "தவறுகளை அனுமதிக்க மாட்டேன் என்று முதல்வர் விஜய் இன்று பகிரங்கமாக அறிவித்துள்ளார். அதுவே ஒரு நல்ல அறிகுறி. இந்த பகிரங்க அறிவிப்பு மக்களிடத்திலே பெரிய எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் உருவாக்கியிருக்கிறது.

நான் மிகச்சிறியவன். என் 30 ஆண்டு காலத்தில் ஒரு உறுதியான, நேர்மையான போராட்டத்தை நடத்தியுள்ளேன். நான் தொடர்ந்து இந்த தமிழ் சமூகத்துக்காக என் பங்களிப்பை செய்வேன். நான் தேர்தலில் போட்டியிடுவேன் என்பது உங்களைப் போன்ற ஊடகத்தினரின் கற்பனை. நான் சமூகப் பணியில் ஆர்வம் உள்ளவன், அதில் ஈடுபடுவேன்.

2010க்கு முன்பாக இந்தியாவின், ஆசியாவின் மிகப்பெரிய கிரானைட் கனிமவள ஊழலை வெளிக்கொண்டு வந்தேன். ஆனால், நமது எவ்வளவு மோசமான ஊழல் மிகுந்த அமைப்பாக இருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு வரைக்கும் அந்த விவகாரத்தில் சிறு துளி கூட நகரவில்லை.

தமிழக அரசுக்கு 10 லட்சம் கோடி ரூபாய் கடன் உள்ளது. அதற்காக ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும் அதற்காக கணிசமான தொகை வட்டியாக கட்டப்படுகிறது. எனவே இது சவாலான பணி. இதனால் செலவீனங்களை குறைத்து, ஊழல்களை அகற்றி நிச்சயமாக லட்சியத்தோடு பயணித்தால் ஒரு காலகட்டத்தில் கடனை குறைக்க முடியும். அரசின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுவதாக சொன்னதை வரவேற்கிறேன்" என்றார்.

## விஜய் பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை மூன்றாவதாக பாடியதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கண்டனம்



**சென்னை, மே 11:** விஜய் பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை மூன்றாவதாக பாடியதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கண்டனம் தெரிவித்துள்ளது. 'தமிழை மூன்றாம் நிலையில் வைத்தது மரபை மீறிய செயல். இந்த தவறுக்கு காரணமானவர்கள் யார் என்பதை தமிழ்நாடு அரசு விளக்க வேண்டும். அரசு நிகழ்வுகளில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவதை உறுதி செய்ய வேண்டும்' எனவும் இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தியுள்ளது.

## விஜய்யின் பதவியேற்பு விழாவில் 3ம் இடத்துக்கு தள்ளப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து: தமிழ் உணர்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள்

**சென்னை, மே 11:** விஜய்யின் பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்ட நிகழ்வு பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தி யுள்ளது. தமிழகத்தின் பண்பாட்டு அடையாளமாகவும், திராவிட மண்ணின் பெருமையாகவும் விளங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துக்குத் தமிழக அரசு விழாக்களில் எப்போதும் முதலிடம் வழங்கப்படுவது மரபு. கடந்த காலங்களில் தமிழக முன்னாள் ஆளுநர் ஆர்.என். ரவி, இந்த மரபை மீறி தேசிய கீதத்தை முதலில் இசைக்க வேண்டும் என்று வலியுறுத்தியபோது, அதனைத் துணிச்சலோடு எதிர்த்து நின்றது அன்றைய திமுக அரசு.



தமிழின் மாண்பையும், மாநிலத்தின் உரிமையையும் எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்க முடியாது என்று ஆளுநரின் கோரிக்கையை நிராகரித்து, தமிழ்த்தாய் வாழ்த்தின் மேன்மையை திமுக அரசு உறுதிப்படுத்தியது.

ஆனால், நேற்று முதல்வர் விஜய்யின் பதவியேற்பு விழாவில் அந்தப் பெருமைமிக்கத் தமிழ் மரபு முற்றிலுமாகத் தூக்கியெறியப்பட்டுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்தைத் தொடக்கத்திலேயே இசைக்காமல், அதற்குப் பதிலாக 'வந்தே மாதரம்' மற்றும் தேசிய கீதத்தை இசைக்கச் செய்து, தமிழ்த்தாய் வாழ்த்தை நிகழ்ச்சியின் இறுதிக்குத் தள்ளிப் புறக்கணிக்கப்பட்டது.

தமிழக மண்ணின் அடையாளமான மாநிலப் பாடலை கடைசி இடத்திற்குத் தள்ளியது, தமிழ் உணர்வாளர்கள் மற்றும் தமிழார்வலர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப்பை யும் ஏற்படுத்தி யுள்ளது. தமிழைத் தூக்கிப் பிடிப்பதாகமேடைக்கு மேடை முழங்கிய விஜய், பதவியேற்ற முதல் நாளிலேயே தமிழ்த்தாய்க்கு உரிய மரியாதையை வழங்கத் தவறியது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

தேசிய அடையாளங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகக் கூறிக்கொண்டு, தமிழகத்தின் தனித்துவமான கலாச்சார நடைமுறையைச் சிதைப்பதும், மாநிலப் பாடலைப் பின்னுக்குத் தள்ளுவதும் புதிய அரசின் கொள்கைப் பிழையாகவே பார்க்கப்படுகிறது. விஜய்யின் இந்த புதிய அரசின் செயல்பாடு, திராவிட மண்ணின் மரபுகளைக் காப்பதாக அமையாது என்பதையே காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் சாடுகின்றனர்.

## புதிய அரசின் முதல் அமைச்சரவையில் சிறுபான்மை முஸ்லிம் சமூகப் பிரதிநிதி இடம்பெறாதது கவலையளிக்கிறது: எஸ்டிபிஐ கட்சியின் மாநிலத் தலைவர் முகம்மது முபாரக்

**சென்னை, மே 11:** புதிய அரசின் முதல் அமைச்சரவையில் சிறுபான்மை முஸ்லிம் சமூகப் பிரதிநிதி இடம்பெறாதது கவலையளிக்கிறது என எஸ்டிபிஐ கட்சியின் மாநிலத் தலைவர் முகம்மது முபாரக் தெரிவித்துள்ளார். மேலும் முகம்மது முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



'தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் திரு. ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்றுள்ள புதிய அரசுக்கு எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் மீண்டும் ஒருமுறை மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய அரசின் பதவியேற்பு விழாவின்போது, இந்த அரசு முழுமையான வெளிப் படைத்தன்மையுடன்செயல்படும் என்கிற உறுதியைத் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது. இந்த உறுதியுடன், அனைத்துத் தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்காகவும், மாநில உரிமையைக் காக்கும் அரசாகவும் செயல்பட வாழ்த்துகிறேன்.

நேற்று நடைபெற்ற புதிய அரசு பதவியேற்பு விழாவின் தொடக்க நிகழ்வுகள், காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் அரசு நடைமுறைகளைச் சிதைக்கும் வகையில் அமைந்திருப்பது வருத்தமளிக்கிறது. குறிப்பாக, தமிழ்த்தாய் வாழ்த்துக்கு மூன்றாம் இடம் கொடுக்கப்பட்டிருப்பது நீண்டகால மரபை மீறிய செயலாகும். தமிழகத்தின் அடையாளமாகவும், பண்பாட்டு விழுமியமாகவும் திகழும் தமிழ்த்தாய் வாழ்த்தை விழாவின் தொடக்கத்திலேயே பாடிக் கௌரவிப்பதே முறையானது. இந்த முன்னுரிமை மாற்றமானது தமிழ்ப்பற்றுடைய மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே, தமிழ்நாட்டின் நீண்டகால மரபைப் புதிய அரசும் பின்பற்றி அதனைப் பாதுகாக்கும் வகையில் சட்டமன்றக் கூட்டம் உள்ளிட்ட அரசு நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்படுவதை இந்த அரசு உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரவை உருவாக்கத்தில் அனைத்துச் சமூகத்தினருக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும், அதில் ஒரு மிகப்பெரிய இடைவெளி இருப்பதை உணர முடிகிறது. குறிப்பாக, சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி கூட இந்த அரசின் முதல் அமைச்சரவையில் இடம்பெறாதது மிகுந்த கவலைக்குரியது.

ஒரு ஜனநாயக நாட்டில் அனைத்துத் தரப்பு மக்களின் குரலும் அதிகார மையத்தில் ஒலிக்க வேண்டியது அவசியமாகும். இனி அது சரிசெய்யப்படுவதாக இருந்தாலும், புதிய அரசில் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின் அமைச்சரவைப் பிரதிநிதித்துவத்தை அனைவரும் எதிர்பார்த்து இருந்த நிலையில், முதல் அமைச்சரவை பதவி ஏற்பில் அச்சமூகத்திற்குப் பிரதிநிதித்துவம் இல்லாதது கவலையும் அதிர்ச்சியும் அளிக்கிறது.

தற்போது இந்தியா முழுவதும் முஸ்லிம் சமூகம் பல்வேறு அரசியல் காரணங்களால் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டு வரும் ஒரு நெருக்கடியான சூழல் நிலவுகிறது. இத்தகைய காலகட்டத்தில், சமூக நீதியைப் போற்றும் தமிழகத்திலும் அதே போன்றதொரு புறக்கணிப்பு தொடர்வது ஆரோக்கியமானதல்ல. சிறுபான்மை மக்களின் உரிமைகளையும், அவர்களின் அரசியல் பங்கேற்பையும் உறுதி செய்ய வேண்டிய கடமை இந்த அரசுக்கு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, வரும் காலத்தில் அதனைச் சரி செய்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்' இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார் முதல்வர் விஜய்



**சென்னை, மே 11:** திருச்சி கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முதல்வர் விஜய், அந்த தொகுதியில் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திருச்சி கிழக்கு மற்றும் பெரம்பூர் ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் தவெக தலைவர் விஜய். இந்த சூழலில் திருச்சி கிழக்கு தொகுதியில் தனது எம்எல்ஏ பதவியை விஜய் ராஜினாமா செய்துள்ளார்.

இதுகுறித்து அரசு தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'தமிழக முதல்வர் விஜய் பதவியேற்பதற்கு முன்பாக திருச்சி கிழக்கு சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதற்கான கடிதத்தை இன்று, தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் செங்கோட்டையன், வெங்கட்ரமணன் ஆகியோர், சட்டப்பேரவை முதன்மை செயலாளர் கி.சீனிவாசனிடம் வழங்கினார்கள்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று காலை நடந்த நிகழ்ச்சியில், தமிழகத்தின் முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

முதல்வர் விஜய்யுடன் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி.அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ்மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். நேற்று நடந்த பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி கலந்துகொண்டார்.

## "கஜானாவில் பணம் இல்லை என கூறி வாக்களித்த மக்களை ஏமாற்றி திசைதிருப்பாதீங்க"

### மு.க.ஸ்டாலின்



**சென்னை, மே 11:** "எடுத்த எடுப்பிலேயே அரசிடம் பணம் இல்லை எனப் பேச ஆரம்பிக்காதீங்க... உங்களுக்கு வாக்களித்த மக்களை மீண்டும் ஏமாற்றி திசைதிருப்பாதீங்க" என்று திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு அறிக்கையில், "தமிழ்நாடு முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதவியேற்றதும் தாங்கள் கையெழுத்திட்டுள்ள அறிவிப்புகளை வரவேற்கிறேன்.

எடுத்த எடுப்பிலேயே அரசிடம் பணம் இல்லை எனப் பேச ஆரம்பிக்காதீங்க. அதெல்லாம் இருக்கு. மக்களுக்குக் கொடுக்க மனசும், ஆட்சித் திறமையும்தான் வேணும்.

ஐந்து ஆண்டுகளாக, கோவிட், வெள்ளம் போன்ற பல பிரச்சினைகளையும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஓரவஞ்சனையையும் சமாளிச்சுதான் நாங்க எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை நிறைவேற்றினோம்.

'ரூபாய் 10 லட்சம் கோடி கடனை வைத்துவிட்டு, கஜானாவைத் துடைத்து விட்டுச் சென்றுள்ளது கடந்த அரசு' - என்ற குற்றச்சாட்டை முதல் உரையிலேயே சொல்லி இருக்கீங்களே... அனுமதிக்கப்பட்ட வரம்புக்குட்பட்டே தமிழ்நாட்டின் கடன் அளவு இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை பற்றி கடந்த பிப்ரவரி மாத பட்ஜெட்லயே தெளிவா நாங்க சொல்லிட்டோம். அது உங்களுக்குத் தெரியாதா? அதுக்குப் பிறகுதான நீங்க பல வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்தீங்க? உங்களுக்கு வாக்களித்த மக்களை மீண்டும் ஏமாற்றி திசைதிருப்பாதீங்க!

"நடைமுறைக்கு சாத்தியமானதை மட்டுமே வாக்குறுதிகளாக அளிக்கிறேன்" எனக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள நீங்கள் இப்போதுதான் அரசு நிர்வாகத்துக்குள் அடியெடுத்து வைக்கிறீர்கள். கூடிய விரைவில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றலாம் எனும் நுணுக்கங்களையும் எங்களைப் போலவே நீங்களும் நிச்சயம் கற்றுக்கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். வாக்களித்த மக்களோடு, நானும் அதையே எதிர்பார்க்கிறேன்.

தங்களின் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணம் தொடர மீண்டும் எனது வாழ்த்துகள்!" என தெரிவித்துள்ளார்.

## 60 ஆண்டு திராவிட ஆட்சிக்குப் பின் தவெக அரசில் பிராமண சமூகத்தினருக்கு மீண்டும் அமைச்சரவை வாய்ப்பு



**சென்னை, மே 11:** 60 ஆண்டு திராவிட ஆட்சிக்குப் பின் தவெக அரசில் பிராமண சமூகத்தினருக்கு மீண்டும் அமைச்சரவை வாய்பபு கிடைத்துள்ளது. தமிழ்நாடு அரசியலில் பல தசாப்தங்களாக திராவிட கட்சிகளின் ஆட்சி நிலவிவரும் நிலையில், பிராமண சமூகத்தினர் அமைச்சரவையில் இடம்பெறுவது மிகவும் அரிதான நிகழ்வாகவே இருந்து வந்தது. அந்த நிலை இன்று மாறியிருக்கிறது. 2026 தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று, முதல்வர் ஜோசப் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் மயிலாப்பூர் எம்எல்ஏ பி. வெங்கடராமணன் அமைச்சராக நேற்று பதவியேற்றிருக்கிறார்.

தமிழகத்தில் இதுவரை பிராமண அமைச்சர்களாக வெறும் சிலரே இருந்துள்ளனர். அதில், ராஜகோபாலாசாரி (ராஜாஜி) முதலமைச்சர் (193740, 195254) அயங்கார் பிராமண சமூகத்தைச் சேர்ந்த ராஜாஜி, காங்கிரஸ் கட்சி சார்பில் இரு முறை மதராஸ் மாகாண முதலமைச்சராக பதவி வகித்தார். சுதந்திரப் போராட்ட தலைவரான இவர், பின்னர் இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாகவும் பணியாற்றினார்.

ஜெயலலிதா முதலமைச்சர் அதிமுக தலைவரான ஜெயலலிதா, பிராமண வழியில் பிறந்தவர். தமிழ்நாட்டில் மிக நீண்ட காலம் (சுமார் 14 ஆண்டுகளுக்கும் மேல்) முதலமைச்சராக பதவி வகித்தவர்களில் இரண்டாமிடத்தில் உள்ளார். தன் ஆட்சிக் காலத்தில் பிராமண சமூகத்தினருக்கு சில வாய்ப்புகள் அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.எச். வி. ஹண்டே சுகாதாரத்துறை அமைச்சர் (19771986). இவர் எம்ஜிஆர் ஆட்சி காலத்தில் இரண்டு முறை சுகாதாரத்துறை அமைச்சராக பணியாற்றினார். கோவையில் பிறந்து மங்களூரில் வேர்களைக் கொண்ட இவர், ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். தற்போது 98 வயதிலும் உயிருடன் இருக்கிறார்.

தற்போது அவர்களது வரிசையில் பிராமணர் வகுப்பை சேர்ந்த பி. வெங்கடராமணன் மயிலாப்பூர் தொகுதியில் இம்முறை முதல்முறையாக சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, விஜய் அமைச்சரவையில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.1967 முதல் திமுக தலைமையிலான அரசுகளில் (196777, 198991, 19962001, 200611, 202126) பிராமண சமூகத்தினருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை. 2026 சட்டமன்றத் தேர்தலிலும் திமுக ஒரு பிராமண வேட்பாளரைக்கூட நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 60 ஆண்டுகளுக்கும் மேலாக திராவிட கட்சிகளின் ஆட்சியில் ஓரங்கட்டப்பட்டிருந்த பிராமண சமூகத்திற்கு, தவெக அரசில் மீண்டும் அமைச்சர் பதவி கிடைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner

டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773

SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388

WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
வண்டலூர்
கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082

EMI 50% 50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

முருகன் துணை
A.S.R ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்
அணுகவும்
7305025591, 9578622711

GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும் சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!! 10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available
BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259

ePAPER PUBLISHING WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP: 9040463899

ADVERTISE WITH US
7789941009

JUST Xth PASS
JOB OPPORTUNITY
₹ 25,000/- PER MONTH *
All Taluks & Districts in ALL STATES in INDIA
FRESHERS CAN APPLY
ATTRACTIVE SALARY
GROWTH OPPORTUNITIES
SECURE YOUR FUTURE
APPLY NOW!
Call / WhatsApp: 8122664699
*Terms & Conditions Apply

WANTED
READYMADE SHOWROOM:
• Sales Man / Sales Girl
RESTAURANT :
• Bryani Master
• Chinese Master
• Atho Master
• Chef
• Helper
OTHER POSITIONS:
• Accounts
• Billing
• Internet Engineer
PLACE: T NAGAR, NAVALUR
CALL / WHAT'SAPP:
7550123560
6369528629

நிலம் தேவை
தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர்
1 - 2 ஏக்கர்
செங்கல்பட்டு
திருப்போரூர்-செங்கல்பட்டு ரோடு உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

₹ 15000 - 21000 | Monthly
Full Time Job Apply, Fresh or Experienced,
100% Job Available Here. No registration fee, Direct Job,
Chennai, Tamilnadu,
• 12th to Graduate and Diploma/ITI Qualified and Other Degree Holders.
• Back Office,
• Data Entry,
• Tele Caller's,
• Field officer,
• Team management, Male/Female Both Can Apply,
Share Your Resume with Photo to
77899 41009

WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
✓ Salary: ₹10,000 - ₹15,000
✓ Attractive Incentives
✓ Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935

D.சக்திவேல்
இமேஜ் அழைப்புக்கு: D. சக்திவேல் - 9940374962

PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210

திருமுடிவாக்கம் அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு
ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி 10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம் :
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com

WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

MATRIMONY WEBSITE/SOFTWARE
VIVAH | SHAADI | PELLI | KALYANAM
Find Your Perfect Life Partner
COMPLETE MATRIMONY WEBSITE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
GET YOUR PROFESSIONAL MATRIMONY WEBSITE TODAY!
BEST PRICE BEST SOLUTION
CALL US 9040463899
WEBSITE www.matrimonyweb.in

WANTED
OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

## கவிதை அரங்கம்!



பனி விழும் இரவில்
வெதுவெதுப்பு நீ,

சுட்டெரிக்கும் வெயிலில்
இளநீர் நீ!

(பாதி தூரம்
கடந்துவிட்டோம்... இதோ
மேலும் சில வரிகள்)


வார்த்தை தேவையில்லை
நாம் பார்த்துக் கொள்ள,

கண்கள் பேசும் காவியம்
போதும்!

உலகம் மறந்து உன்
மடியில் தூங்க,

ஒரு கணம் போதும் என்
கவலை தீர!

## வாழ்க்கை தத்துவம்...



முயற்சிப்பவன் எவனும் தோற்பதில்லை; அவன் ஒன்று வெற்றி பெறுகிறான் அல்லது கற்றுக்கொள்கிறான்.

கடின உழைப்பு ஒருபோதும் கைவிடாது.

காலம் உனக்காகக் காத்திருக்காது, நீதான் காலத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வாய்ப்பு கதவைத் தட்டும் வரை காத்திருக்காதே, நீயே ஒரு கதவை உருவாக்கு.

உன்னை நீ செதுக்கிக்கொள்ளும் வரை நீ ஒரு வெறும் கல் தான்.

பயத்தை எதிர்கொள், அது காணாமல் போய்விடும்.

## "மழை நாளில் வலை வீசு"

காலை முதலே வானம் கரு மேகங்களால் சூழப்பட்டிருந்தது. கடற்கரை வெறிச்சோடி கிடந்தது. படகுகள் எல்லாம் கரையில் கட்டப்பட்டிருந்தன.

"இன்னிக்கு யாரும் கடலுக்குப் போகக் கூடாது!" — கிராமத்து மூத்தவர் கட்டளையிட்டார்.

அனைவரும் தலை ஆட்டினார்கள்.

ஆனா... ஒருவன் மட்டும் மறுப்பாய் நின்றான்.

அவன் முருகன். இளம் மீனவன். கடனில் மூழ்கியவன். மூன்று நாளாக வீட்டில் சமைக்கவே இல்லை. காரணம்?.. வறுமை.

அவனுடைய மனைவி மெல்லக் கேட்டாள். "இன்னிக்குப் போகாம இருக்க முடியாதா?"

"பசி மழையை விட மோசம்டி..." என்றான் முருகன்.

யார் பேச்சையும் கேட்காமல் அவன் தனியாக படகைத் தள்ளிக் கடலுக்குள் சென்றான்.

மழை முகத்திலடித்தது. காற்று படகை பேயாட்டம் ஆட்டியது. எதைப் பற்றியும் கவலைப்படாமல் முருகன் வலையை எடுத்தான்.

"இது கடைசி முயற்சி..." உள்ளுக்குள் சொல்லியவாறே வீசினான்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, வலை திடீரென்று கனமானது.

"அடடா... பெரிய மீன் போல..!" அவன் கண்கள் மின்னின. மொபைல்முழு வலிமையுடன் வலையை இழுத்தான்.

மழை... காற்று... அலை... எல்லாவற்றையும் எதிர்த்து...வலை மேலே வந்தது.

ஆனால், அதில் மீன் இல்லை. ஒரு குழந்தை இருந்தது.

நீரில் நனைந்த, கிட்டத்தட்ட மயக்க நிலையில் ஒரு குழந்தை.

முருகன் உறைந்து நின்றான். "இது எப்படி...?"

அந்தக் குழந்தையைத் தூக்கினான். அதன் மார்பில் மெதுவாகத் தட்டினான். "ஏய்... கண்ணா... கண்ணைத் திற..."

சில விநாடிகளுக்குப் பிறகு குழந்தை சன்னமாய் அழுதது.

முருகன் கண்களில் ஆனந்தக் கண்ணீர். உடனே கரைக்குத் திரும்பினான்

கிராமத்தார் அதிர்ச்சியுடன் பார்த்தார்கள். "முருகா... இது என்ன?"

"கடல் இன்று மீன் குடுக்கலை... ஆனா குழந்தை இல்லாத குறையைத் தீர்க்க ஒரு குழந்தையைத் தந்திருக்குது..." அவன் சொன்னான்.

அந்த நாள்... முருகனின் வீடு வெறுமையில்லை. ஒரு உயிர் மீண்ட சந்தோஷம் நிரம்பி வழிந்தது.

அன்று முதல் கிராமத்தில் ஒரு கதை பரவியது,

"மழை நாளில் வலை வீசினால் — மீன் மட்டும் அல்ல... நமக்கு இல்லாத ஒன்றும் கிடைக்கும்"



(முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



நோயாளி: டாக்டர், ஆபரேஷன் முடிஞ்சதும் நான் பியானோ வாசிக்க முடியுமா?

டாக்டர்: கண்டிப்பா முடியும்.

நோயாளி: தேங்க்ஸ் டாக்டர். ஏன்னா இதுக்கு முன்னாடி எனக்கு பியானோ வாசிக்கவே தெரியாது!




## தினம் ஒரு சமையல்



### முருங்கைக்கீரை சாம்பார்

தேவையான பொருட்கள்:


துவரம் பருப்பு: 1/2 கப்
முருங்கைக்கீரை: 1 பெரிய கிண்ணம் (சுத்தம் செய்தது)
சின்ன வெங்காயம்: 10 (தோல் உரித்தது)
தக்காளி: 1 (நறுக்கியது)
புளி கரைசல்: ஒரு சிறிய நெல்லிக்காய் அளவு
சாம்பார் பொடி: 1 ½ டேபிள் ஸ்பூன்
மஞ்சள் தூள்: 1/4 டீஸ்பூன்
தாளிக்க: கடுகு, சீரகம், காய்ந்த மிளகாய், பெருங்காயத்தூள்
எண்ணெய்/நெய்: தேவையான அளவு
உப்பு: சுவைக்கேற்ப



செய்முறை:

பருப்பு வேகவைத்தல்: துவரம் பருப்பை மஞ்சள் தூள் மற்றும் சிறிது எண்ணெய் சேர்த்து குக்கரில் நன்றாகக் குழைய வேகவைத்துக் கொள்ளவும்.
கீரை வதக்குதல்: ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு, சீரகம், பெருங்காயம், காய்ந்த மிளகாய் சேர்த்துத் தாளிக்கவும். பின் சின்ன வெங்காயம் மற்றும் தக்காளி சேர்த்து வதக்கவும்.
வேகவைத்தல்: வெங்காயம் வதங்கியதும், சுத்தம் செய்து வைத்துள்ள முருங்கைக்கீரையைச் சேர்த்து ஒரு நிமிடம் வதக்கவும். பின் சாம்பார் பொடி மற்றும் உப்பு சேர்த்து சிறிது தண்ணீர் ஊற்றி கீரையை வேகவிடவும்.
புளி சேர்த்தல்: கீரை வெந்ததும் புளி கரைசலை ஊற்றி பச்சை வாசனை போகும் வரை கொதிக்க விடவும்.
ஒன்று சேர்த்தல்: இப்போது வேகவைத்த பருப்பைச் சேர்த்து நன்றாகக் கிளறவும். குழம்பு ஒரு கொதி வந்ததும் இறக்கவும் (கீரை சேர்த்த பிறகு அதிக நேரம் கொதிக்க வைக்கத் தேவையில்லை).

## எட்டி பயன்கள்



எட்டி மரம் (STRYCHNOS NUX-VOMICA), ஆங்கிலத்தில் NUX VOMICA என்று அழைக்கப்படுகிறது. இது மருத்துவ குணங்கள் நிறைந்த அதே வேளையில், மிகுந்த நச்சுத்தன்மை கொண்ட ஒரு தாவரமாகும். எனவே, இதனை முறையான சுத்திகரிப்புக்குப் பிறகே பயன்படுத்த வேண்டும்.
சித்த மருத்துவம் மற்றும் ஆயுர்வேதத்தில் எட்டி மரத்தின் பயன்கள் இதோ:

1. நரம்பு மண்டல பாதிப்புகள்
எட்டி மிகச்சிறந்த நரம்பு ஊக்கியாகச் செயல்படுகிறது. பக்கவாதம் (PARALYSIS), நரம்புத் தளர்ச்சி மற்றும் முகவாதம் போன்ற பிரச்சனைகளுக்குச் சுத்திகரிக்கப்பட்ட எட்டி கொட்டைகளிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் நல்ல பலன் தரும்.
2. ஜீரண மண்டலக் கோளாறுகள்
பசியின்மை, நாட்பட்ட வயிற்றுப்போக்கு மற்றும் செரிமானக் குறைபாடுகளைக் குணப்படுத்த மிகக் குறைந்த அளவில் எட்டி மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. இது வயிற்றுத் தசைகளைத் தூண்டி ஜீரண சக்தியை அதிகரிக்கும்.
3. வலி நிவாரணி
மூட்டு வலி, இடுப்பு வலி மற்றும் தசை பிடிப்புகளுக்கு எட்டி கொட்டை சேர்த்த தைலங்கள் வெளிப்பூச்சாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது வலியை மரக்கச் செய்து நிவாரணம் அளிக்கும்.
4. விஷ முறிவு
பாம்புக்கடி மற்றும் தேள் கடி போன்ற விஷக்கடிகளுக்குச் சில குறிப்பிட்ட மருந்துச் சேர்க்கைகளில் எட்டி பயன்படுத்தப்படுகிறது. (இது மருத்துவர்களின் நேரடி மேற்பார்வையில் மட்டுமே செய்யப்பட வேண்டும்).

5. தோல் வியாதிகள்
நாள்பட்ட தோல் நோய்கள் மற்றும் அரிப்பு போன்ற பிரச்சனைகளுக்கு எட்டியிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் உள்மருந்தாகவும், வெளிப்பூச்சாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

## விஜய் - திரிஷாவுக்கு திருமணம்; நாங்க மெஹந்தி ஃபங்ஷனுக்கு போவோம்.! பிரபல நடிகை அதிர்ச்சி



தமிழ்நாட்டு சட்டமன்ற தேர்தலில் பெரும் வெற்றியைப் பெற்றுள்ள நடிகர் விஜய் இன்றைய தினம் முதல்வராக பதவியேற்க உள்ளார். அவருடைய அரசியல் வாழ்க்கை மட்டுமல்லாமல் தனிப்பட்ட வாழ்க்கை குறித்த வதந்திகளும் சினிமா உலகம் தாண்டியும் பெரும் பேசுபொருளாக இருந்து வருகின்றன.

இந்த நிலையில் பிரபல இந்தி நடிகையும் சமூக வலைதள கண்டென்ட் கிரியேட்டருமான ராக்கி சாவந்த், தனியார் ஊடகத்துக்கு அளித்த சமீபத்திய பேட்டியில் விஜய் மற்றும் திரிஷா குறித்து பேசியுள்ளார்.

அதன்படி அவர் கூறுகையில், விஜயும் திரிஷாவும் திருமணம் செய்துகொள்ள வேண்டும், நாங்கள் அவர்களின் மெஹந்தி விழாவிற்கு வருகை தருவோம் என்று தெரிவித்தார்.

திரிஷாவை நான் சிறு வயது முதலே அறிவேன். நாங்கள் இருவரும் ஒன்றாக திரையுலகில் போராடிய நாட்கள் உண்டு. அவர் பாலிவுட்டிலிருந்து தென்னிந்திய சினிமாவிற்கு மாறினார். விஜயுடன் அவரது ஜோடி மிகவும் அழகாக இருக்கிறது என்றும் கூறினார்.

விஜயைப் பற்றி பேசிய ராக்கி, நான் தனிப்பட்ட முறையில் விஜயை மிகவும் விரும்புகிறேன். அவர் மிகவும் நல்ல குணம் உடையவர். அவருடன் ஒரு பாட்டு பாட வேண்டும் என்பது என்னுடைய கனவாக இருந்தது. ஆனால் வாய்ப்பே கிடைக்கவில்லை. இப்போது அவரது கட்சியிலேயே சேர்ந்துவிடலாம் என்று தோன்றுகிறது என்று நகைச்சுவையாக கூறியுள்ளார்.

## சினிமா



சேலையில் ஹாட் ஆக அவர் போஸ் கொடுத்திருக்கும் ஸ்டில்கள் வைரல் ஆகி இருக்கிறது. தலையில் அவர் வைத்திருக்கும் மல்லிகைப்பூ தான் ஹைலைட்.

## 'காவாலா' ஹிட் மறுபடியும் வருமா.. அல்லது ஃபேன் ரியாக்ஷன் மாறுமா?- 'ஜெயிலர் 2'

ரஜினிகாந்த், நெல்சன் திலீப்குமார் கூட்டணியில் உருவாகும் 'ஜெயிலர் 2' படப்பிடிப்பு ஏப்ரல் 21ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு உள்ளிட்டோர் நடிக்கும் இப்படத்தில் சிவராஜ்குமார், மோகன்லால், வித்யா பாலன், எஸ்.ஜே.சூர்யா, விஜய் சேதுபதி போன்றோர் சிறப்பு தோற்றத்தில் வருவதாக கூறப்படுகிறது. தற்போது போஸ்ட் புரொடக்ஷன் வேகமாக நடைபெற்று, ஆகஸ்ட் வெளியீடுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


இப்படத்தின் படப்பிடிப்புகள் ஏப்ரல் 21ம் தேதியோடு நிறைவடைந்தது என அதிகாரபூர்வமாக அறிவித்தது தயாரிப்பு நிறுவனம். இப்போது படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் வேலைகள் பரபரப்பாக நடந்து கொண்டிருக்கிறது.




படத்தை ஆகஸ்ட் மாதம் வெளியிட திட்டமிட்டு வருகிறார்கள். ஜூன் மாதம் படத்தின் முதல் சிங்கிள் வெளியாக உள்ளது என சொல்லப்படுகிறது. இதுதான் இப்போதைய ஜெயிலர் 2 அப்டேட். ஜெயிலர் முதல் பாகத்திலிருந்து முதல் சிங்கிளாக வெளியான 'காவாலா' மிகப்பெரிய ஹிட் அடித்தது. கிட்டத்தட்ட அந்தப் படத்துக்கான முகவரியாகவே மாறியது. அது போல இந்தப் பாடலும் பெரிய ஹிட்டை கொடுக்குமா என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக இப்படத்தின் படப்பிடிப்பு வேலைகள் நடந்துவந்தது. முதல் பாகம் மிகப்பெரிய ஹிட் என்பதால் இந்த பாகத்தின் மீது மேலும் பெரிய எதிர்ப்பார்ப்பு உருவாகியுள்ளது.

# ஓய்வு பெற்ற ஆசிரியரிடம் ரூ.82 லட்சம் டிஜிட்டல் மோசடி



**தெலங்கானா, மே 11:**


தெலங்கானா மாநிலம் மகபூபா பாத் பகுதியில் வசிக்கும் ஓய்வு பெற்ற அரசு ஆசிரியரிடம் கடந்த ஏப்ரல் மாதம் 11-ம் தேதி தொலைபேசியில் பேசிய மர்ம நபர்கள், சிபிஐ அதிகாரிகள் என்றும், உங்கள் மீது உங்களின் ஆதார் எண்ணின் படி 17 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்றும், ஆதலால் டிஜிட்டல் கைது செய்யப்பட்டுள்ளீர்கள் எனவும் மிரட்டி உள்ளனர்.

பின்னர், கைது நடவடிக்கையில் இருந்து காப்பாற்ற உடனடியாக ரூ.75 லட்சத்தை மும்பையில் உள்ள ஒரு வங்கிக்கு அனுப்பி வைக்கும்படியும், இவ்வழக்கு விசாரணை முடிந்த பின்னர் மே மாதம் 2-ம் தேதி உங்கள் பணம் மொத்தமும் மீண்டும் உங்கள் வங்கி கணக்கிற்கே அனுப்பி வைக்கப்படும் எனவும் கூறி உள்ளனர்.

அவர்கள் கூறியபடி கடந்த ஏப்ரல் மாதம் 15-ம் தேதி முதல் படிப்படியாக ரூ.82 லட்சம் அனுப்பி உள்ளார்.

பின்னர் ஏமாற்றப்பட்டதை அறிந்து ஆசிரியர் மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரும் இது தொடர்பாக மகபூபாபாத் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அந்த புகாரின் அடிப்படையில் போலீஸார் வழக்கு பதிவு செய்து குற்றவாளிகளை பிடிக்க தனிப்படை அமைத்துள்ளனர்.

# ஹார்முஸ் ஜலசந்தி அருகே படகு தீப்பற்றியதில் இந்திய மாலுமி உயிரிழப்பு



**புதுடெல்லி, மே 11:**

ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் சரக்குகளை ஏற்றிச் சென்ற ஒரு மரப் படகில் நேற்று முன்தினம் தீ விபத்து ஏற்பட்டு கடலில் கவிழ்ந்துள்ளது.

அந்தப் படகில் 18 இந்திய மாலுமிகள் இருந்தனர். இந்த விபத்தில் இந்தியர் ஒருவர் உயிரிழந்தார். காயம் அடைந்த 4 பேர் துபாய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 17 மாலுமிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். துபாயில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்ட இந்தியர்களை சந்தித்து நலம் விசாரித்ததாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படகு உரிமையாளருடன் தொடர்பில் உள்ள தூதரகம், பாதிக்கப்பட்ட மாலுமிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது.

# அமலாக்கத் துறை மீண்டும் சோதனை: பஞ்சாப் அமைச்சர் சஞ்சீவ் அரோரா கைது



**புதுடெல்லி, மே 11:**

பஞ்சாப் அமைச்சர் சஞ்சீவ் அரோரா வீட்டில் அமலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று மீண்டும் சோதனை நடத்தி கைது செய்தனர்.

சண்டிகரின் செக்டர் 2-ல் உள்ள பஞ்சாப் தொழில் துறை அமைச்சர் சஞ்சீவ் அரோராவின் இல்லத்துக்கு, நேற்று காலை சுமார் 20 வாகனங்களில் சென்று அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

சண்டிகர் தவிர, டெல்லியில் இரண்டு இடங்களிலும், குருகிராமின் உத்யோக்விஹாரில் உள்ள ஹாம்ப்டன் ஸ்கை ரியாலிட்டி நிறுவனத்திலும் சோதனைகள் நடத்தப்பட்டன. பின்னர் சஞ்சீவ் அரோராவை அதிகாரிகள் கைது செய்தனர்.

ரூ.100 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள செல்போன்களை கொள்முதல் செய்ததாக போலியான நிறுவனங்களிடம் இருந்து ஜிஎஸ்டி ரசீது பெறப்பட்டது தொடர்பாக அமைச்சர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, கடந்த ஏப்ரல் 17-ம் தேதி அரோரா மற்றும் அவருடன் தொடர்புடைய நிறுவனங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. இந்நிலையில் மீண்டும் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, ஹாம்ப்டன் ஸ்கை ரியாலிட்டி, அரோரா மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூ.157.12 கோடி மதிப்புள்ள அசையும் மற்றும் அசையா சொத்துகளை அமலாக்கத் துறை தற்காலிகமாக முடக்கியுள்ளது. டெல்லி முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் தனது எக்ஸ் சமூக வலைதள பதிவில், "மேற்கு வங்கத்தில் தேர்தல் முடிந்த நிலையில், மோடி பஞ்சாபில் அமலாக்கத் துறை சோதனைகளைத் தொடங்கியுள்ளார். அமலாக்கத் துறை சோதனைகளுக்குப் பிறகு ஆம் ஆத்மி மாநிலங்களவை எம்.பி. அசோக் மிட்டல் பாஜகவில் சேர்ந்தார். இதே வழியில் அரோராவுக்கு எதிராக சோதனை நடத்தியும் அவர் பாஜகவில் சேரவில்லை. அதனால் அவருக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மீண்டும் ஒரு சோதனை நடந்துள்ளது" என்று கூறியுள்ளார்.

# பாஜகவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்: மம்தா பானர்ஜி அழைப்பு

**கொல்கத்தா, மே 11:**

மேற்கு வங்கத்தில் ரவீந்திரநாத் தாகூரின் பிறந்த தினத்தை ஒட்டி கொல்கத்தாவில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி பேசியதாவது:

பாஜகவுக்கு எதிராக இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரள வேண்டும். தேசிய கட்சிகளும் பாஜகவுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும். இதுதொடர்பாக அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நான் தயாராக உள்ளேன்.



என்னுடைய முதல் எதிரி பாஜக, இந்த நேரத்தில் எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன் என்ற கண்ணோட்டத்தில் சிந்திக்கக் கூடாது. எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி மாணவர் அமைப்புகள், தன்னார்வ தொண்டு அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம்.

காங்கிரஸ் தலைவர்கள் கார்கே, சோனியா, ராகுல், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், டெல்லி முன்னாள் முதல்வர் கேஜ்ரிவால் உள்ளிட்டோர் என்னிடம் பேசினர். உத்தவ் தாக்கரே, ராஷ்டிரிய ஜனதா தள மூத்த தலைவர் தேஜஸ்வி யாதவ் ஆகியோர் தகவல்களை அனுப்பி உள்ளனர். அகிலேஷ் யாதவ் நேரில் வந்து ஆதரவை தெரிவித்தார். மாநில, தேசிய அளவில் பாஜகவுக்கு எதிராக தொடர்ந்து போராடுவேன். இவ்வாறு மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

# பெங்களூரு: ஓட்டலில் பயங்கர தீ விபத்து; ஊழியர் சாவு- 4 பேர் கவலைக்கிடம்

**பெங்களூரு, மே 11:**

பெங்களூரு நாகரபாவியில் துர்கா ஸ்ரீகிராண்ட் ஓட்டல் அமைந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு வேலை முடிந்ததும் அங்கு பணிபுரியும் 5 ஊழியர்களும் மேல் தளத்தில் உள்ள அறையில் இருந்தனர்.

இந்த நிலையில் இரவு நேரத்தில் ஓட்டலில் திடீரென தீப்பிடித்து எரிந்தது. இந்த தீ மளமளவென ஓட்டல் முழுவதும் பரவி கொழுந்துவிட்டு எரிந்தது. இதனால் அங்கு புகைமூட்டம் நிலவியது. மேலும் மேல்தளத்துக்கும் புகை பரவியது.

இதனால் அதிர்ச்சியடைந்த ஊழியர்கள் 5 பேரும் அங்கிருந்து வெளியேற முயன்றனர். ஆனால் புகை மூட்டம் காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்தனர். இதில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். மற்ற 4 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களும் கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது. ஓட்டலில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமானது. போலீஸ் விசாரணையில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது தெரியவந்தது.

# பாலக்காடு; தோட்டத்தில் இறந்து கிடந்த காட்டுயானை

**பாலக்காடு, மே 11:**

பாலக்காடு மாவட்டம் அட்டப்பாடி பகுதி கோட்டப்பறையில் கல்கண்டி கிராமத்தில் தோட்டம் ஒன்று உள்ளது. இந்த தோட்டத்தில் காட்டுயானை ஒன்று இறந்த நிலையில் காணப்பட்டது. இதைப்பார்த்த அப்பகுதி மக்கள் உடனே வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் வனத்துறையினர் விரைந்து வந்து பார்வையிட்டனர். இதில் இறந்தது சுமார் 20 வயது மதிக்கத்தக்க ஆண் யானை என்பது தெரியவந்தது. காட்டுப்பன்றிகளை பிடிக்க தோட்டத்தில் அமைக்கப்பட்ட மின்வேலியில் சிக்கியதில் மின்சாரம் தாக்கி யானை இறந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து வனத்துறையினர் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மோடி பிரதமரான பிறகு 9 மாநிலங்களில் முதல்முறையாக பா.ஜனதா ஆட்சி

**புதுடெல்லி, மே 11:**

மோடி பிரதமரான பிறகு. 9 மாநிலங்களில் பா.ஜனதா முதல்முறையாக ஆட்சி அமைந்துள்ளது. மோடி பிரதமரான 2014-ம் ஆண்டு, அரியானா, மராட்டிய மாநிலங்களில் பா.ஜனதாவின் வெற்றிப்பயணம் தொடங்கியது. அரியானாவில், முதல்முறையாக அமைந்த பா.ஜனதா ஆட்சியில் மனோகர்லால் கட்டார் முதல்-மந்திரி ஆனார்.

அதே ஆண்டு, மராட்டிய மாநிலத்தில் பா.ஜனதா தனிப்பெரும் கட்சியாக உருவானது. கூட்டணி கட்சிகள் ஆதரவுடன் தேவேந்திர பட்னாவிஸ் முதல்-மந்திரி ஆனார். 2016-ம் ஆண்டு, வடகிழக்கில் பா.ஜனதா கால் பதிக்கத் தொடங்கியது. அந்த ஆண்டு, அசாம் சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று, சர்பானந்தா சோனோவால் தலைமையில் முதலாவது பா.ஜனதா ஆட்சி பதவி ஏற்றது. அப்போதிருந்து ஆட்சியை தக்கவைத்து வருகிறது. அதே ஆண்டில், மற்றொரு வடகிழக்கு மாநிலமான அருணாசலபிரதேசத்திலும் முதல்முறையாக பா.ஜனதா ஆட்சி அமைந்தது. காங்கிரசை சேர்ந்த முதல்-மந்திரி பெமா காண்டு, 33 எம்.எல்.ஏ.க்களுடன் பா.ஜனதாவில் சேர்ந்து பா.ஜனதா ஆட்சி அமைத்தார். 2017-ம் ஆண்டு, மணிப்பூரில், தேர்தலுக்கு பிந்தைய கூட்டணி அமைத்து, பிரேன்சிங் தலைமையில் முதல்முறையாக பா.ஜனதா ஆட்சி அமைந்தது. 2018-ம் ஆண்டு, திரிபுராவில், முதல்முறையாக பிப்லப் குமார் தேவ் தலைமையில் பா.ஜனதா ஆட்சி பதவியேற்றது. 2024-ம் ஆண்டு, ஒடிசா சட்டசபை தேர்தலில் 24 ஆண்டுகால பிஜு ஜனதாதள ஆட்சியை வீழ்த்தி, பா.ஜனதா ஆட்சி அமைத்தது. பீகாரில், கூட்டணி ஆட்சியில் பா.ஜனதா இருந்துள்ளது. கடந்த மாதம் நிதிஷ்குமார் பதவி விலகியவுடன், முதல்முறையாக பா.ஜனதா தலைமையில் ஆட்சி அமைந்தது. தற்போது. மேற்கு வங்காளத்தில், முதல்முறையாக பா.ஜனதா அரசு பதவியேற்றுள்ளது. இதுபற்றி பா.ஜனதா தேசிய செய்தித்தொடர் பாளர் ஷெசாத் பூனவல்லா கூறுகையில், 'இன்று 21-22 மாநி லங்களில் பா.ஜனதா மற்றும் கூட்டணி ஆட்சி நடக்கிறது. இந்திய மக்கள்தொகையில் 78 சதவீதத்தை பா.ஜனதா கூட்டணி ஆட்சி ஆள்கிறது. நிலப்பரப்பில் 72 சதவீதத்தை ஆள்கிறது" என்றார்.

பா.ஜனதா தேசிய செய்தித்தொடர்பாளர் துஹின் ஏ.சின்ஹா கூறுகையில், "தமிழ்நாடு, கேரளா ஆகிய 2 தென் மாநிலங்களை தவிர, நாடு முழுவதும் பா.ஜனதா வலிமையான இடத்தில் உள்ளது. அந்த 2 மாநிலங்களும் கட்சியின் வருங்கால விஸ்தரிப்பு திட்டத்தில் இடம் பெற்றுள்ளன" என்றார்.

# முப்படை புதிய தலைமை தளபதி; கடற்படை தளபதி நியமனம்

**புதுடெல்லி, மே 11:**

முப்படை தலைமைத் தளபதியாக இருக்கும் ஜெனரல் அனில் சவுகானின் பதவிக் காலம் வரும் 30-ம் தேதியுடன் முடிகிறது.

இதையடுத்து முப்படை புதிய தலைமைத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் ராஜா சுப்ரமணி (ஓய்வு) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். தற்போது தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் தலைமைச் செயலகத்தில் ராணுவ ஆலோசகராக பணியாற்றுகிறார். இவர் ராணுவத் துணைத் தளபதியாக கடந்த 2024-ம் ஆண்டு முதல் 2025-ம் ஆண்டு வரை பணியாற்றியவர்.



இதேபோல் கடற்படையின் புதிய தளபதியாக, துணைத் தளபதியாகப் பணியாற்றும் வைஸ் அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வரும் 31-ம் தேதி பதவியேற்றுக் கொள்கிறார். இவரது பதவிக் காலம் 2028 டிசம்பர் 31-ல் முடிவடையும்.

# 98 வயது பாஜக மூத்த தலைவரின் காலில் விழுந்து ஆசி பெற்ற பிரதமர் மோடி



**கொல்கத்தா, மே 11:**

மேற்கு வங்கத்தின் சிலிகுரி பகுதியைச் சேர்ந்தவர் மாகன் லால் சர்க்கார். அவர் சியாமா பிரசாத் முகர்ஜியின் நெருங்கிய நண்பர் ஆவார். கடந்த 1952-ம் ஆண்டில் காஷ்மீரில் தேசியக் கொடியேற்றும் போராட்டத்தை சியாமா பிரசாத் நடத்தினார். இந்த போராட்டத்தில் மாகன் லால் சர்க்காரும் பங்கேற்றார். அப்போது அவர் காஷ்மீரில் கைது செய்யப்பட்டார். மாகன் லால் சர்க்கார், சிலிகுரி மாவட்ட பாஜக தலைவராக மிக நீண்ட காலம் பணியாற்றி உள்ளார். பல்வேறு மாவட்டங்களின் பாஜக ஒருங்கிணைப்பாளராகவும் அவர் பதவி வகித்துள்ளார். கடந்த 1980-களில் மேற்கு தினாஜ்பூர், ஜல்பைகுரி, டார்ஜிலிங் மாவட்டங்களில் சுமார் 10,000-க்கும் மேற்பட்டோரை பாஜகவில் அவர் இணைத்தார். கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற பாஜக பதவியேற்பு விழாவில் மாகன் லால் சர்க்கார் பங்கேற்றார். அப்போது விழா மேடையில் அவரது காலில் விழுந்து பிரதமர் நரேந்திர மோடி ஆசி பெற்றார். இதுகுறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

மேற்கு வங்கத்தில் முதல்முறையாக பாஜக அரசு பதவியேற்று உள்ளது. இந்த நேரத்தில் சியாமா பிரசாத் முகர்ஜியை நினைவுகூர்கிறேன். குறிப்பாக நாட்டுக்காகவும் மேற்கு வங்கத்துக்காகவும் அவர் அளித்த பங்களிப்பை நினைவு கூர்கிறேன்.

கொல்கத்தா பதவியேற்பு விழாவில் தேசியவாதி மாகன் லால் சர்க்காரை சந்திக்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது. அவர், சியாமா பிரசாத் முகர்ஜியோடு இணைந்து பணியாற்றியவர் ஆவார். அவரோடு இணைந்து ஜம்மு காஷ்மீர் போராட்டத்தில் பங்கேற்றவர்.

தனது வாழ்நாளை பாஜகவுக்காக அவர் ஒதுக்கி உள்ளார். மேற்கு வங்கத்தில் பாஜக ஆழமாக கால் ஊன்ற அவர் முக்கிய பங்காற்றி இருக்கிறார்.

மாகன் லால் சர்க்கார் போன்ற பாஜக தலைவர்களால் கட்சி வலுவடைகிறது. அவரை நினைத்து பாஜக மிகுந்த பெருமிதம் கொள்கிறது. இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்

# கடல் மணலில் விஜய் சிலை வடிவமைப்பு: வாழ்த்து தெரிவித்த சுதர்சன் பட்நாயக்

**புரி, மே 11:**

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் 108 இடங்களில் வெற்றிபெற்ற தமிழக வெற்றிக் கழகம், காங்கிரஸ் - 5, இந்திய கம்யூனிஸ்ட் - 2, மார்க்சிஸ்ட் - 2, விசிக - 2 மற்றும் ஐயுஎம்எல் - 2 ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கிறது. விஜய் முதல்வராக ஞாயிற்றுக்கிழமை பதவியேற்கிறார். இதில் காங்கிரஸ் கட்சி, தவெக கூட்டணி அரசில் பங்கேற்கிறது. மற்ற கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி உள்ளன.




இதையடுத்து அவருக்கு மக்கள் மற்றும் பல்வேறு துறையை சார்ந்த பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வரிசையில் மணற் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக்கும் இணைந்துள்ளார். முக்கிய தருணங்கள் மற்றும் விழா நாட்களில் தான் பெற்ற கலையான மணற் சிற்பக் கலையை கொண்டு அதை போற்றுவதை சுதர்சன் பட்நாயக் வழக்கமாக கொண்டுள்ளார். அந்த வகையில் ஒடிசா மாநிலம் புரி கடற்கரையில் விஜய்யின் சிலையை அவர் வடிவமைத்துள்ளார். அதில் விஜய் சினிமா துறையில் நடிகராக இருந்து தவெக எனும் அரசியல் கட்சியை தொடங்கி, தேர்தலில் வென்று, முதல்வராகி உள்ளதை குறிப்பிடும் வகையிலான விளக்கத்தை சுதர்சன் பட்நாயக் கொடுத்துள்ளார்.

அதில் 'வாழ்த்துகள் விஜய் அண்ணா' என்பதும் இடம்பெற்றுள்ளது. இதை தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்து விஜய்க்கு அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.




# சென்னை: வங்கியில் போலி நகையை அடகு வைத்த 2 பேர் கைது



**சென்னை, மே.11:** சென்னையை அடுத்த திருமுல்லை வாயல், செந்தில் நகர் பகுதியைச் சேர்ந்தவர் குமரன் (27). இவர், சென்னை, கெல்லீஸ் பகுதியில் உள்ள வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் வங்கிக்கு வந்த இரு நபர்கள் 15.4 கிராம் எடையுள்ள தங்க நகைகளை அடகு வைக்க கொடுத்தனர். அந்த நகைகளை மதிப்பீட்டாளர் குமரன் தீவிரமாகச் சோதனை செய்தபோது, அவை உண்மையான தங்கம் அல்ல என்பதும், செம்பு உள்ளிட்ட உலோகங்களின் மீது தங்க மூலம் பூசப்பட்ட போலி நகைகள் என்பதும் தெரியவந்தது.

இதையடுத்து, உடனடியாக தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலையத்தின் குற்றப்பிரிவில் புகார் அளித்தார். புகாரின் பேரில் காவல்துறையினர், வங்கிக்கு விரைந்து வந்து மோசடியில் ஈடுபட முயன்ற 2 பேரையும் கைது செய்தனர்.

அதில் அவர்கள் சென்னை கொண்டித்தோப்பை சேர்ந்த ராஜேஸ் திவார் சோனி (54) மற்றும் புளியந்தோப்பை சேர்ந்த தமிழ்ச் செல்வன் (48) என்பது தெரிய வந்தது. இவர்கள் இருவரும் ஏற்கனவே இதே பாணியில் பல்வேறு வங்கிகளில் போலி நகைகளை அடகு வைத்து பல லட்சம் ரூபாய் மோசடி செய்திருப்பது தெரியவந்தது.

# சென்னையில் 445 கிலோ குட்கா பறிமுதல் - ஆட்டோவில் கடத்தி விநியோகம்

**சென்னை, மே.11:** சென்னையில் ஆட்டோவில் குட்கா கடத்தி விநியோகித்து வந்த நபரை கைது செய்த போலீஸார், அவரிடம் இருந்த 445.5 கிலோ குட்கா புகை யிலை பாக்கெட்டுகளை பறிமுதல் செய்தனர்.

சென்னை காவல் ஆணையரின் உத்தரவின் பேரில், மாநகரம் முழுவதும் போதைப் பொருட்களுக்கு எதிரான தீவிர கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, சூளைமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர், அரும் பாக்கம் மெட்ரோ ரயில் நிலையம் அருகே நேற்று முன்தினம் தீவிர வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அந்த வழியாக வந்த ஆட்டோ ஒன்றை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி போலீஸார் சோதனை செய்தனர். அப்போது, ஆட்டோவில் இருந்த மூட்டைகளில் குட்கா புகையிலை பாக்கெட்டுகள் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, ஆட்டோவை ஓட்டி வந்த கொடுங்கையூர் எம்ஜிஆர் நகரைச் சேர்ந்த வெற்றிவேல் (45) என்பவரை போலீஸார் கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில், தலைமறை வாக உள்ள சில நபர்களின் அறி வுறுத்தலின் பேரில், அரும்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையம் அருகே நிறுத்தப்பட்டிருந்த இலகுரக சரக்கு வாகனத்தில் (மினி லாரி) இருந்து குட்கா மூட்டைகளை ஆட்டோவுக்கு மாற்றி, நகரின் வேறு பகுதிக்கு விநியோகம் செய்ய முயன்றது தெரிய வந்தது.

பின்னர், அங்கு சென்று அந்த சரக்கு வாகனத்தையும், அதிலிருந்த குட்கா புகையிலை பாக்கெட்டுகள் அடங்கிய மூட்டைகளையும் போலீஸார் பறிமுதல் செய்தனர். இந்த சோதனையில்,மொத்தம் 445.5 கிலோ குட்கா பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், நடைபெற்ற விசாரணையில் பிடிபட்ட வெற்றிவேல் மீது ஏற்கனவே திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் குட்கா கடத்தல் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது தெரிய வந்தது. இந்த கடத்தல் சம்பவத்தில் பின்னணியில் உள்ள முக்கிய நபர் களையும் போலீஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

# பொத்தேரியில் டாரஸ் லாரி மோதி அண்ணன் கண் முன்பு தம்பி உயிரிழப்பு

**மறைமலை நகர், மே.11:** காஞ்சி மாவட்டம், படப்பை அருகே உள்ள ஏரிவாக்கம் கிராமத்தை சேர்ந்தவர் ரோகித் (20), இவர் பொத்தேரில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டப்படிப்பு படித்து வருகிறார்.

இந்நிலையில் இவரது தம்பி வைபவுடன் (16), நேற்று முன்தினம் பைக்கில் பொத்தேரி ஜி.எஸ்.டி. சாலையில் சென்று கொண்டிருந்தார். பொத்தேரி ரயில் நிலையம் எதிரே செல்லும் போது பின்னால் வந்த டாரஸ் லாரி, பைக் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட வைபவ் பலத்த காயம் அடைந்து அண்ணன் கண் முன்னர் உயிரிழந்தார். காயமடைந்த லோகித்தை அக்கம் பக்கத்தினர் மீட்டு அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். தகவல் அறிந்த தாம்பரம் போக்குவரத்து புலனாய்வு போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

மற்றொரு சம்பவம்: திருப்போரூரை அடுத்த பொன்மார் மலைத்தெருவை சேர்ந்த ஆனந்த ராஜ் (31), நேற்று முன்தினம் மணிக்கு பஜாஜ் பல்சர் பைக்கில் புதுப்பாக்கம் - தாழம்பூர் சாலையில் சென்றபோது தாழம்பூர் சீனிவாச நகர் ஸ்ரீராம் ஸ்டீல்ஸ் கடை அருகே நிலைதடுமாறி கீழே விழுந்தார். இதில், தலையின் பின் பக்கம் பலத்த காயம் ஏற்பட்டது.

இதில், அந்த வழியாக சென்றவர் ஆனந்தராஜை மீட்டு தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார். இதுதொடர்பாக, பள்ளிக்கரணை போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# மகளை காதலித்ததால் கொடூரம் 8 மாதத்தில் அடுத்தடுத்து 2 பேரை கொன்ற தந்தை

## விசாரணையில் பகீர் தகவல்கள்

**சிவகாசி, மே.11:** விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே செவலூர் மேலத்தெருவை சேர்ந்தவர் பிரபாகரன் (28). இவர் 2 தினங்களுக்கு முன்பு சிவகாசி அருகே உள்ள கொத்தனேரி கண்மாய் பகுதியில் கழுத்து அறுத்து படுகொலை செய்யப்பட்டார். இதுகுறித்து எம்.புதுப்பட்டி போலீசார் வழக்கு பதிந்து செவலூரை சேர்ந்த கில்லாடி சுரேஷ் (46), மதுரை விளாங்குடியை சேர்ந்த விக்னேஷ் (36) ஆகிய 2 பேரை கைது செய்தனர்.

போலீசார் கூறுகையில், "கைதான கில்லாடி சுரேஷின் 17 வயது மகளை பிரபாகரன் காதலித்துள்ளார். இதனால் அவரை மது அருந்த அழைத்துச் சென்று கில்லாடி சுரேஷ் கொலை செய்துள்ளார். இதேபோல் சிவகாசி அருகே புதுக்கோட்டையை சேர்ந்த தமிழரசனும் (26) தனது மகளை காதலித்ததால் கடந்த செப்டம்பர் மாதம் கில்லாடி சுரேஷ் தனது மகனுடன் சேர்ந்து கொலை செய்தார். கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் இருந்தபோது விக்னேசுடன் பழக்கம் ஏற்பட்டு பிரபாகரன்

# குழந்தைகள், பெரியவர்களை கவர்ந்த ஊட்டி நாய்கள் கண்காட்சி

**ஊட்டி, மே.11:** ஆண்டு தோறும் கோடை சீசனின் போது, தென்னிந்திய கென்னல் கிளப் சார்பில் ஊட்டியில் நாய்கள் கண்காட்சி நடத்தப்படுகிறது.

அதன்படி, நடப்பாண்டு 138 மற்றும் 139-வது நாய்கள் கண்காட்சி ஊட்டி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. தினமும் நாய்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.



இதில் ஹோண்டு, லேப்ரடார், ஜெர்மர் ஷெப்பர்டு, டாஸ்ஹவுண்ட், கோல்டன் ரீட்டிவர், கிரேட் டேன், பீகிள், பார்டர் கோலி, மினியேச்சர் பின்சர், பஷ்மி ஹோவுண்ட், பிளாக் ஜெர்மன் ஷெப்பர்டு, பக், டாபர்மேன் ஆகிய நாய்கள் பங்கேற்றுள் ளன. இந்தாண்டு வெல்ஷ் கார்கி மற்றும் ஷப்பர்க்கி ஆகிய புதிய இன நாய்கள் பங்கேற்றன.

பீகிள், டாஷ்சண்டு, நாட்டு ரக நாய்களான ராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி ஆகிய இந்திய ரக நாய்களின் சிறப்பு கண்காட்சி நேற்று நடந்தது. நாய் கண்காட்சியில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தங்கள் செல்லப்பிராணிகளுடன் உற்சாகமாக கலந்து கொண்டனர். பங்கேற்பாளர்கள் செல்லப்பிராணிகளின் திறமைகளை வெளிப்படுத்தினர்.

கண் காட்சியின் இறுதி நாளான இன்று, போட்டியில் பங்கேற்ற நாய்களில் ஒன்றுக்கு 'ஆண்டின் சிறந்த நாய்' விருது வழங்கப்படும்.

# மாநகர பேருந்து மோதி விபத்தில் பலியான பெயின்டர் குடும்பத்துக்கு ரூ.25.81 லட்சம் இழப்பீடு

**சென்னை, மே.11:** மாநகர பேருந்து மோதிய விபத்தில் பலியான பெயின்டரின் குடும்பத்துக்கு ரூ.25.81 லட்சத்தை இழப்பீடாக வழங்க சென்னை மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான இழப்பீட்டு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை, அயனாவரம் பகுதியைச் சேர்ந்த பெயின்டர் சதீஷ்குமார், கடந்த 2022 செப்.21 அன்று தனது பைக்கில் நண்பருடன் வில்லிவாக்கம் நோக்கி சென்று கொண்டிருந்தார்.

அப்போது, புது ஆவடி சாலையில் மாநகரப் பேருந்து மோதி படுகாயமடைந்த சதீஷ்குமார் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்நிலையில், தனது மகனின் இறப்புக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு கோரி, சதீஷ்குமாரின் தாயார் ராணி சென்னை மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எம்.அருந்ததி, மாநகரப் பேருந்து ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை காரணமாகவே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது எனக்கூறி, உயிரிழந்த சதீஷ்குமாரின் தாயார் மற்றும் அவரது குடும்பத்துக்கு இழப்பீடாக ரூ.25,81,800-ஐ ஆண்டுக்கு 7.5 சதவீத வட்டியுடன் வழங்க மாநகர போக்குவரத்து கழகத்துக்கு உத்தரவிட்டார்.

# கோடை விடுமுறை கூட்ட நெரிசலை சமாளிக்க சென்னை - கன்னியாகுமரி இடையே சிறப்பு ரயில்: தெற்கு ரயில்வே அறிவிப்பு

**சென்னை, மே.11:** தெற்கு ரயில்வே கூறியிருப்பதாவது: கூட்ட நெரிசலை சமாளிக்க சென்னை எழும்பூர் - கன்னியாகுமரி - சென்னை எழும்பூர் இடையே அதிவிரைவு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. அதன்படி சென்னை எழும்பூர் - கன்னியாகுமரி அதிவிரைவு சிறப்பு ரயில் (வண்டி எண்: 06045) மே 15, 22, 29, ஜூன் 5 ஆகிய நாட்களில் வெள்ளிக்கிழமைகளில் சென்னை எழும்பூரில் இருந்து நள்ளிரவு 11.50 மணிக்கு புறப்பட்டு நெல்லை சந்திப்பு ரயில் நிலையத்திற்கு 10.25 மணிக்கு வந்தடையும்.



பின்னர் 10.30 மணிக்கு புறப்பட்டு நாகர்கோவிலுக்கு 11.40 மணிக்கும் நண்பகல் 1 மணிக்கு கன்னியாகுமரி சென்றடையும்.

மறு மார்க்கத்தில் கன்னியாகுமரி - எழும்பூர் அதிவிரைவு ரயில் (வண்டி எண்:06046) மே 17, 24, 31, ஜூன் 7 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் கன்னியாகுமரியில் இருந்து நள்ளிரவு 11.25 மணிக்கு புறப்பட்டு 12.55 மணிக்கு நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் வந்தடையும். பின்னர் 1 மணிக்கு புறப்பட்டு தாம்பரத்திற்கு காலை 10.15 மணிக்கும், சென்னை எழும்பூருக்கு நண்பகல் 11.30 மணிக்கும் சென்றடையும். இந்த 2 ரயில்களும் 4 சேவைகள் இயக்கப்படுகிறது.

இந்த ரயில்களில் இரண்டு அடுக்கு மற்றும் மூன்று அடுக்கு ஏசி பெட்டிகள் - தலா 2, 10 இரண்டாம் வகுப்பு படுக்கை வசதியுள்ள பெட்டிகள், 3 பொது பெட்டிகள், 2 மாற்றுத்திறனாளிகளுக்கான இரண்டாம் வகுப்பு பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும். இதற்கு முன்பதிவு இன்று (10ம் தேதி) காலை 8 மணிக்கு துவங்குகிறது.

இவ்வாறு தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

# ஒத்திவாக்கம், உத்திரமேரூரில் நெல் மூட்டைகள் தேக்கம்



**செங்கல்பட்டு / உத்திரமேரூர், மே.11:** ஒத்திவாக்கம், உத்திரமேரூரில் உள்ள கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் தேக்கம் அடைந்துள்ளன. இவற்றை கிடங்குகளுக்கு அனுப்பி வைக்க விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றம் ஒன்றியம், ஒத்திவாக்கத்தில் தேசிய கூட்டுறவு இணையம் வாயிலாக நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு கடந்த ஒரு வார காலமாக கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் கிடங்குக்கு கொண்டு செல்லப்படாமல் உள்ளன.

தற்போது மழை பெய்யும் சூழல் ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் மழையும் பெய்து வருகிறது. இதன் காரணமாக நெல் மூட்டைகள் நனைந்து வீணாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. உடனடியாக கொள்முதல் செய்த நெல் மூட்டைகளை கிடங்குக்கு கொண்டு செல்ல அலுவலர்கள் வாகனங்களை அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மழைக்காலங்களில் கொள்முதல் செய்த நெல் மூட்டைகளை மூடிவைக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் வழங்கப்படுவது போல் தார்ப்பாய் மற்றும் சணல் உள்ளிட்டவை தேசிய கூட்டுறவு நுகர்பொருள் இணையத்திலும் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

உத்திரமேரூர் பகுதி காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெல் விவசாயம் அதிகம் நடைபெறும் பகுதியாகும். கடந்த நவரைப் பருவத்தில் ஏரி மற்றும் கிணற்றுப் பாசனத்தைப் பயன்படுத்தி உத்திரமேரூர் அருகே உள்ள அரும் புலியூர், பழவேரி, கரும்பாக்கம், களியப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக நெல் சாகுபடி செய்யப்பட்டது.

கடந்த சில நாட்களாக கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யும் பணி மந்தமாக நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கு லாரிகள் மூலம் உடனுக்குடன் ஏற்றிச் செல்லாததால். நிலையங்களிலேயே மூட்டைகள் மலைபோல் குவிந்துள்ளன. அரும்புலியூர் உள்ளிட்ட பகுதிகளில் 8,000 மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு தேக்கமடைந்துள்ளன. 10,000-க்கும் மேற்பட்ட மூட்டைகள் இன்னும் கொள்முதல் செய்யப்படாமல் திறந்தவெளியில் காத்திருக்கின்றன.

# துணிச்சலாக செயல்பட்டதாக பெண் மாஜிஸ்திரேட்டுக்கு உயர் நீதிமன்றம் பாராட்டு

**மதுரை, மே.11:** மதுரை மாவட்ட நீதிமன்றத்தின் துணிச்சலான பெண் மாஜிஸ்திரேட்டுக்கு உயர் நீதிமன்றம் பாராட்டு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் மதுரை 5-வது நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி முன் வழக்கு விசாரணைக்காக ஒரு நபர் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது மதுரை வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள் மற்றும் சில வழக்கறிஞர்கள் சேர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தனர் என்றும், இந்தச் சம்பவத்தில் வழக் கறிஞர்கள் ஒருமையில் பேசி நீதிமன்றத்தின் மாண்பைக் குலைக்கும் வகையில் நடந்துகொண்டதாக தெரிகிறது. இதுகுறித்து நீதிபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இதனால் நீதிமன்றப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு, நீதிபதி தனது இருக்கையிலிருந்து எழுந்து செல்லும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து, சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கான நோட்டீசை அந்த நீதிபதி பிறப்பித்தார். இதை எதிர்த்து வழக்கறிஞர்கள் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுதாக்கல் செய்தனர். இந்த மனு நீதிபதி விக்டோரியா கௌரி முன் விசாரணைக்கு வந்தது.

வழக்கறிஞர்கள் நீதிமன்ற அதிகாரத்தை மீறி அழுத்தம் கொடுக்க முயன்றால், அதை ஏற்க முடியாது. மாவட்ட நீதித்துறை நீதி வழங்கல் அமைப்பின் முதுகெலும்பாகும். சாதாரண குடிமகன் முதலில் அணுகுவது இந்த நீதிமன்றங்களைத் தான். எனவே, நீதிமன்றத்தின் கண்ணியத்தையும் கவுரவத்தையும் பேணுவது வழக்கறிஞர்களின் கடமை.

நீதிமன்றத்தில் நடந்த சம்பவம் குறித்து சிசிடிவி காட்சிகள் போன்ற முதற்கட்ட ஆதாரங்கள் உள்ள நிலையில், இந்த கட்டத்தில் வழக்கை ரத்து செய்ய முடியாது எனக் கூறி அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# சென்னை, புறநகரில் விடிய விடிய பெய்த மழை: விமான சேவைகள் பாதிப்பு

**சென்னை, மே.11:** கடும் வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில், சென்னை, புறநகரில் நேற்று விடிய விடிய மழை பெய்தது. இதனாலா, பூமி குளிர்ந்து ரம்மியமான சூழல் நிலவியது.

சென்னை, புறநகரில் கடந்த இரு வாரங்களாக கடும் வெயில் வாட்டி வதைத்து வந்தது. கடந்த சில தினங் களாக சென்னையில் 100 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு மேல் வெப்பநிலை பதிவாகி வந்தது. இதனால், பொதுமக்கள் பகல் நேரங்களில் வெளியில் செல்ல முடியாமலும், இரவில் புழுக்கத்தால் தூங்க முடியாமலும் அவதிப்பட்டு வந்தனர்.






இந்நிலையில், 7-ம் தேதி நள்ளிரவு மற்றும் 8-ம் தேதி காலை ஆங்காங்கே விட்டு விட்டு மழை பெய்தது. இதன் தொடர்ச்சியாக, சென்னை, புறநகரில் நேற்று அதிகாலை நேரத்தில் பரவலாக மழை பெய்தது. காலையிலிருந்து லேசான தூரல் மழை பெய்தது.

இதனால், காலை முதலே மாநகர், புறநகர் பகுதிகளில் குளிர்ச்சியான சூழல் நிலவியது. அதனைத் தொடர்ந்து நேற்று பிற்பகலிலும் சென்னை, புறநகர் பகுதிகளில் மீண்டும் மழை பெய்து, சாலையில் மழைநீர் ஓடியது.

சாலையோரங்களில் ஆங்காங்கே மழைநீர் தேங்கியது. நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக, நுங்கம்பாக்கம், டிஜிபி அலுவலகம், எண்ணூர், சோழிங்க நல்லூரில் தலா 2 செ.மீ,தண்டையார்பேட்டை,எம்ஜிஆர் நகர், பெரம்பூர், சைதாப்பேட்டை, சென்னை ஆட்சியர் அலுவலகம், வில்லிவாக்கம், அண்ணா பல்கலைக் கழகம் ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

விமான சேவைகள் பாதிப்பு: சென்னையில் மழை காரணமாக நேற்று மோசமான வானிலை நிலவியதால், சென்னை விமான நிலையத்தில் விமானங்கள் தரையிறங்க முடியாமல், நடுவானில் வட்டமடித்து கொண்டிருந்தன.

பெங்களூர், மும்பையில் இருந்து வந்த இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் உட்பட 5 விமானங்கள் சென்னையில் தரையிறங்க முடியாததால், அந்த விமானங்களை பெங்களூருக்கு திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சிறிது நேரத்தில் வானிலை சீரானதும், விமானங்கள் சென்னையில் தரையிறங்கின.

அதேநேரம், சென்னையில் இருந்து அகமதாபாத், டெல்லி, கண்ணூர், தூத்துக்குடி, கோவை, சேலம் உள்ளிட்ட 10 இடங்களுக்கு செல்ல இருந்த விமானங்கள் பலத்த மழையால் தாமதமாக புறப்பட்டன.

சென்னை விமான நிலையத்தில் மொத்தமாக 15-க்கும் மேற்பட்ட விமான சேவைகள் பாதிக்கப்பட்டதால்,

# அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் குழாய் வழி இயற்கை எரிவாயு பயன்பாடு அதிகரிக்க திட்டம்

**எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் தகவல்**




**சென்னை, மே.11:** அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் குழாய் வழி இயற்கை எரிவாயு பயன்பாட்டை அதிகரிக்க திட்டம் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் தெரிவித்துள்ளது. குழாய் வழி இயற்கை எரிவாயு பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கத்தில் ஓ.எம்.ஆர். சாலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு உடனடி காஸ் இணைப்பு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கைஎரிவாயுஒழுங்குமுறை வாரியத்துடன் இணைந்து செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளில் குழாய் வழி எரிவாயு இணைப்பு வழங்கி, அந்த குடியிருப்பை எல்.பி.ஜி இல்லா குடியிருப்பு என சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக ஓ.எம். ஆர். சாலையில் உள்ள ஸ்டேட் வங்கி அலுவலர் குடியிருப்பு, விக்டோரியா டவர், எம்பஸி ரெசிடென்சி, பொல்லினேனி பேஸ் 1,2,3 மற்றும் அர்பன் ரைஸ் ரெவல்யூஷன் ஆகிய குடியிருப்புகளில் அடங்கிய வீடுகளில் வசிப்பவர்களுக்கு 100 சதவீதம் இந்த குழாய் வழி இயற்கை எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டது.

இதற்கான எல்.பி.ஜி. ப்ரீ ஸோன் எனப்படும் எல். பி.ஜி. இல்லா பகுதி என்ற சான்றிதழும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்துகொண்ட திங்க் காஸ் நிறுவனத்தின் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மண்டல தலைவர் திருக்குமரன் கூறுகையில், 'இந்த எல்.பி.ஜி ப்ரீ ஸோன் அறிவிப்பின் மூலம், குடியிருப்புகளுக்கான குழாய் வழி இயற்கை எரிவாயு பயன்பாட்டை விரைவுபடுத்தவும், குழாய் எரிவாயு வசதி பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும் நாங்கள் முயற்சிக்கிறோம். இந்த குடியிருப்புகளில் மக்களிடம் இருந்து கிடைக்கும் வரவேற்பு எங்களுக்கு ஊக்கமளிக்கிறது. மேலும் பல குடும்பங்கள் எவ்வித சிரமமுமின்றி குழாய் வழி இயற்கை எரிவாயு பயன்பாட்டிற்கு மாறுவதற்கு முழு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்' என்றார்.

சான்றிதழினை வழங்கி பேசிய பெட்ரோலியம் மற்றும் இயற்கைஎரிவாயுஒழுங்குமுறை வாரியத்தின் துணை இயக்குநர் அசுதோஷ் பட் கூறுகையில், 'இந்தப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் குழாய் வழி இயற்கை எரிவாயு பயன்பாட்டைபயன்பாட்டை ஊக்குவிக்க திங்க் கேஸ் நிறுவனம் எடுத்துள்ள முயற்சிகளை நாங்கள் பாராட்டுகிறோம்.

எல்.பி.ஜி ப்ரீ ஸோன்களை அறிவிப்பது, விழிப்புணர்வை வலுப்படுத்துவதிலும், மக்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதிலும், நகர எரிவாயு கட்டமைப்பின் பரந்த வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது, அடுக்குமாடி குடியிருப்புகள் முழுவதையும் குழாய் வழி காஸ் பயன்படுத்தும் வகையில் ஊக்குவிக்க முடிவு செய்துள்ளோம்' என்று தெரிவித்தார்.

வரும் மாதங்களில் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு பகுதி முழுவதும் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும் என்று 'திங்க் காஸ்' நிறுவனம் தெரிவித்துள்ளது. அதிகளவில் குழாய் வழி இயற்கை எரிவாயு இணைப்பை பெறும் மேலும் பல குடியிருப்புகளுக்குச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கவும் திட்டமிட்டுள்ளது.

# சட்டப்பேரவைத் தேர்தலில் 4023 வேட்பாளர்களில் 3352 பேர் டெபாசிட் இழப்பு

**சென்னை, மே.11:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 72 மணி நேரத்தில் தேர்தல் தொடர்பான புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் படி, தமிழகத்தில் 86 சதவீத வாக்குகள் பதிவாகியிருப்பது தெரியவந்துள்ளது.




இதுதொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலத் தேர்தல் தொடர்பான புள்ளி விவரங்கள், தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட 72 மணி நேரத்துக்குள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த புள்ளிவிவர அறிக்கைகளை டிஜிட்டல் முறையில் விரைவாகப் புதுப்பித்து வெளியிடுவது என்பது, கடந்த ஓராண்டில் ஆணையம் மேற்கொண்ட 30-க்கும் மேற்பட்ட முயற்சிகளில் ஒன்றாகும். இசிஐநெட் (ECINET) செயலி அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பு, இந்த தரவுகளை கள அலுவலர்கள் கையால் பூர்த்தி செய்து வந்ததால், இந்த செயல்முறைக்கு பல வாரங்கள் முதல் மாதங்கள் வரை ஆனது.

தற்போது வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்தில் வேட்பாளர்கள், வாக்காளர்கள், பதிவான வாக்குகள், எண்ணப்பட்ட வாக்குகள், கட்சி வாரியாக மற்றும் வேட்பாளர் வாரியாக பதிவான வாக்குகள் என 14 வகையான தரவுகள் உள்ளன. இதை இசிஐநெட் செயலி மற்றும் இணையதளம் (https://www.eci.gov.in/statistical-reports) மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 72 மணி நேரத்துக்குள் புள்ளிவிவர அறிக்கைகள் வெளியிடப்படுவது இதுவே முதல் முறை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, தமிழகத்தில் 5,74,11,793 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 4,93,89,958 பேர் வாக்களித்துள்ளனர். இதில், தபால் மூலம் மட்டும் 5,86,954 பேர் வாக்களித்த நிலையில், அவற்றில் 65,047 பேரின் தபால் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. சட்டப்பேரவைத் தேர்தலில் 4023 வேட்பாளர்களில் 3352 பேர் டெபாசிட் இழந்துள்ளனர். நோட்டாவுக்கு 1,99,805 பேர் வாக்களித்துள்ளனர். செல்லத்தக்கதாக 4.91 கோடி வாக்குகள் பதிவாகியுள்ளன. வெளிநாடுகளில் 2,730 வாக்காளர்கள் உள்ள நிலையில், 16 பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தம் பதிவான வாக்குகள் 86.03 சதவீதமாக உயர்ந்துள்ளது.

# சிவகங்கையில் இருந்து ராமநாதபுரத்திற்கு கடத்திய ரூ.2 கோடி கஞ்சா பறிமுதல்: சினிமா பாணியில் விரட்டி பிடித்த போலீசார்

**திருவாடானை, மே.11:** சிவகங்கையில் இருந்து ராமநாதபுரத்திற்கு இரண்டு சொகுசு கார்களில் கஞ்சா மூட்டைகள் கடத்துவதாக சிவகங்கை கியூ பிராஞ்ச் போலீசாருக்கு நேற்று முன்தினம் இரவு 12 மணிக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து சிவகங்கையில் இருந்து புறப்பட்ட சம்பந்தப்பட்ட சொகுசு கார்களை கியூ பிராஞ்ச் போலீசார் ரகசியமாக பின்தொடர்ந்தனர். போலீசார் பின்தொடர்வதை அறிந்த கடத்தல்காரர்கள், ராமநாதபுரம் மாவட்டம், தொண்டி நோக்கி அதிவேகமாக சென்றனர்.





சினிமா காட்சிகளை விஞ்சும் வகையில் இசிஆர் சாலையில் கார்களை மின்னல் வேகத்தில் ஓட்டிச் சென்றனர். போலீசாரும் அவர்களை விடாமல் துரத்திச் சென்றனர். சுமார் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக நீடித்த பரபரப்பான சேஸிங்கிற்கு பிறகு, திருவாடானை கடற்கரை கிராமமான வட்டாணம் அருகே வைத்து போலீசார் ஒரு காரை லாவகமாக மடக்கி பிடித்தனர். மற்றொரு கார் போலீசாரின் பிடியில் இருந்து தப்பி குறுக்கு வழியில் அஞ்சுகோட்டை நோக்கிச் சென்றது.

விடாமல் துரத்திய போலீசார் அந்த காரையும் சுற்றிவளைத்து பிடித்தனர். போலீசாரை கண்டதும் 2 கார்களிலும் இருந்த கடத்தல்காரர்களும் இறங்கி தப்பியோடிவிட்டனர். கார்களை போலீசார் சோதனையிட்டபோது, சாக்கு மூட்டைகளில் சுமார் 300 கிலோ கஞ்சா இருந்தது. இதன் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.2 கோடி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கார்கள், கஞ்சா மூட்டைகளை பறிமுதல் செய்த போலீசார் ராமநாதபுரம் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர். இந்த கஞ்சா மூட்டைகள் கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர். தப்பியோடிய கடத்தல் கும்பலை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# அரசியல் கார்னர்

## மக்கள் நலன் காக்க விஜய்யின் அரசுக்கு பாமக முழு ஆதரவு அளிக்கும்: அன்புமணி

**சென்னை, மே.11:** மக்கள் நலன் காப்பதற்கான விஜய் அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பாட்டாளி மக்கள் கட்சி அதன் முழு ஆதரவை அளிக்கும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழ்நாட்டின் முதல்வராக தவெக தலைவர் விஜய், அவருடன் 9 பேர் கொண்ட அமைச்சரவையும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. புதிய முதல்வருக்கும், அவரது அமைச்சரவை சகாக்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்திருப்பது எந்தக் கட்சியாக இருந்தாலும், ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் நோக்கமும், எதிர்பார்ப்பும் ஒன்று தான். எந்த வகையான போதையும் இல்லாத, பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழக்கூடிய, இளைஞர்களுக்கு தரமான கல்வியும், வேலை வாய்ப்பும் வழங்கக்கூடிய, உழவர்களின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தக் கூடிய, அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய, அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய, இவை அனைத்துக்கும் மேலாக சமூக நீதியை பாதுகாக்கக் கூடிய அரசு அமைய வேண்டும் என்பது தான் அது. இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற புதிய அரசு தீவிரமாக முயல வேண்டும்.

தவெக-வின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள முதல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஆணையில் புதிய முதல்வர் முதல் கையெழுத்திட வேண்டும்; மற்ற வாக்குறுதிகளையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும். மக்கள் நலன் காப்பதற்கான விஜய் அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பாமக அதன் முழு ஆதரவை அளிக்கும்; அரசின் தவறுகளை சுட்டிக்காட்டுவதிலும், அந்தத் தவறை திருத்தச் செய்வதிலும் பொறுப்புள்ள, ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக பாமக செயல்படும்." என்று அன்புமணி கூறியுள்ளார்.

## ஆதரிப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி விஜய்க்கு முட்டுக்கட்டை: தமிழிசை விமர்சனம்

**சென்னை, மே.11:** ஸ்டாலின் உட்பட திமுக கூட்டணி கட்சியினர் அனைவரும் ஆதரிப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திவிட்டு, விஜய்க்கு முட்டுக்கட்டை போடுகின்றனர் என தமிழக பாஜக முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தர ராஜன் விமர்சித்துள்ளார்.



இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் கூறியிருப்பதாவது: ஆட்சி அமைக்க முழுமையான எண்ணிக்கை இல்லாததாலேயே, விஜய் 3 முறை சந்தித்த பிறகும் அவரை ஆளுநர் திருப்பி அனுப்பியுள்ளார். 'நீங்கள் எண்ணிக்கையோடு வாருங்கள், அனுமதி தருகிறோம்' என்று ஆளுநர் மாளிகை தெளிவாக சொல்கிறது. ஆனால், ஒவ்வொரு முறையும் போதிய எண்ணிக்கை இல்லாமல் சென்றுவிட்டு, ஆளுநர் மீது பழிபோடுவது நியாயமா?

தேர்வுகளில் இத்தனை மதிப்பெண்கள் பெற்றால்தான் தேர்ச்சி எனும்போது, அவ்வளவு மதிப்பெண் பெறாமலே என்னை தேர்வு செய்யுங்கள் என்று கூறுவது சரியா? அதேபோல, எல்லோரும் வெளியே இருந்து விஜய்யை ஆதரிப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்திவிட்டு, அவருக்கு முட்டுக்கட்டை போடுகின்றனர். "தனிப்பெரும் கட்சியை ஆளுநர் அழைக்கவேண்டும்" என்று கூறிவிட்டு, பின்னணியில் பல முட்டுக்கட்டைகள் போட்டுக் கொண்டிருக்கிறார் ஸ்டாலின்.

கம்யூனிஸ்ட்கள் ஆதரவு தெரிவித்துவிட்டு, 'மத்திய பாஜக அரசு ஆளுநருக்கு அழுத்தம் தருகிறது' என்கின்றனர். அதிலும் உண்மைஇல்லை. எல்லோரும் தங்களதுசுயநலத்துக்காக தங்களது அரசியல் நகர்வை செய்துவிட்டு, ஆளுநர் மீதோ, பாஜக மீதோ பழி சுமத்துவது சரியல்ல. இவ்வாறு அவர் கூறினார்.

முருகானந்தம் கேள்வி: இதேபோல, திமுக கூட்டணியில் அங்கம் வகித்த காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள், விசிக ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க முயலும் விஜய்யை பாஜக மாநில பொதுச் செயலாளர் ஏ.பி.முருகானந்தம் கடுமையாக விமர்சித்துள்ளார். அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில், 'தீய சக்தியில் 10 எடுத்து, தூய சக்தியில் கலந்தால் என்ன சக்தி வரும்?' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## திமுக-அதிமுக அல்லாத ஒரு கட்சி தமிழகத்தை ஆளவிருப்பதில் மகிழ்ச்சி – சீமான்

**சென்னை, மே.11:** த.வெ.க. தலைவர் விஜய் நேற்று தமிழக பொறுப்பு கவர்னர் ராஜேந்திர அர்லேகரை நேரில் சந்தித்து, தமிழகத்தில் ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அப்போது, பெரும்பான்மைக்கு தேவையான எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு கடிதத்தை வழங்கினார். அதனை ஏற்றுக்கொண்ட பொறுப்பு கவர்னர், த.வெ.க. தலைவர் விஜய் தலைமையிலான அரசு பதவியேற்க அழைப்பு விடுத்துள்ளார். அதன்படி, சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை 10 மணிக்கு பதவியேற்பு விழா நடைபெற உள்ளது.

அதில், த.வெ.க. தலைவர் விஜய் தமிழக முதல்-அமைச்சராக பதவியேற்க உள்ளார். அவருக்கு கவர்னர் அர்லேகர், பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைக்கிறார். அவருடன் புஸ்ஸி ஆனந்த், செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார், அருண்ராஜ் உள்பட 10 பேர் அமைச்சர்களாக பதவியேற்க உள்ளனர்.

இந்த நிலையில், தமிழக முதல்-அமைச்சராக பதிவி ஏற்க உள்ள தவெக தலைவர் விஜய்க்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் ,

"தமிழ்நாட்டு முதல்-அமைச்சராகப் பொறுப்பேற்கும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்க்கும், அவரது அமைச்சரவையினருக்கும் உளப்பூர்வமான வாழ்த்துகள்!.. திமுக-அதிமுக அல்லாத ஒரு கட்சி பல்லாண்டுகள் கழித்து தமிழகத்தை ஆளவிருப்பதில் மகிழ்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் பொறியியல் சேர்க்கை கட் ஆப் குறைகிறது: மாணவர்களுக்கு நல்ல செய்தி

**சென்னை, மே.11:** தமிழ்நாட்டில் பொறியியல் சேர்க்கை கட் ஆப் குறையும் என கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர். தமிழ்நாட்டில் பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், இந்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கான கட் ஆப் மதிப்பெண்கள் கடந்த ஆண்டை விட 2 முதல் 4 மதிப்பெண் வரை குறையும் என்று கல்வி நிபுணர்கள் கணிக்கின்றனர். இது பொறியியல் படிப்பில் சேர விரும்பும் மாணவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் செய்தியாக உள்ளது.



பொறியியல் கல்லூரியில் சேர விரும்பும் மாணவர்கள் பிளஸ் 2 தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய மூன்று பாடங்களில் பெற்ற மதிப்பெண்களை வைத்து ஒரு மொத்த மதிப்பெண் கணக்கிடப்படும். அதுவே கட் ஆப் மதிப்பெண் எனப்படும். கட் ஆப் அதிகமாக இருந்தால் நல்ல கல்லூரியில் நல்ல படிப்பில் சேரலாம்.

கட் ஆப் குறைந்தால் கடந்த ஆண்டை விட குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களும் நல்ல கல்லூரியில் இடம் பெறலாம்.

இந்த ஆண்டு கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய மூன்று பாடங்களிலும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் (சதம்) பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை கடும் சரிவை சந்தித்துள்ளது. நூறு மதிப்பெண் பெற்றவர்கள் குறைந்தால், அதிக மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கையும் குறையும். அதனால் கட் ஆப்பும் தானாகவே குறையும்.

அதாவது,இயற்பியலில் மட்டும் சதம் பெற்றவர்கள் 1,125 இருந்து 105 ஆக சரிந்துள்ளனர். அதாவது ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த ஆண்டு குறைவாக பெற்றனர்.

இது மிகப்பெரிய வித்தியாசம். அரசு தேர்வுகள் இயக்ககம் தெரிவிக்கையில், இந்த ஆண்டு பிளஸ் 2 வினாத்தாள்களில் மனப்பாடம் செய்தால் மட்டும் விடையளிக்கக்கூடிய கேள்விகளை குறைத்து, யோசித்து புரிந்து விடையளிக்க வேண்டிய உயர் சிந்தனைத் திறன் கேள்விகளை அதிகமாக சேர்த்தனர் என்று தெரிவித்தனர். இதுவே சதம் பெற்றவர்கள் குறைய முக்கிய காரணம் என்று விளக்கினர்.

வேதியியல் ஆசிரியர் கூறுகையில், "வேதியியல் வினாத்தாளில் இதற்கு முன்பு திரும்பத் திரும்ப வந்த கேள்விகள் இந்த ஆண்டு மிகவும் குறைவாக இருந்தன. புரிந்து பயன்படுத்துவதற்கான கேள்விகளே அதிகமாக கேட்கப்பட்டன. இதனால்தான் நூறு மதிப்பெண் பெற்றவர்கள் எண்ணிக்கை குறைந்தது" என்றார். இயற்பியல் ஆசிரியர் கூறுகையில், "வினாத்தாள் பொதுவாக எளிதாகத்தான் இருந்தது. ஆனால் பல தேர்வு வினாக்களில் இரண்டு ஒரு மதிப்பெண் கேள்விகள் தந்திரமாக அமைந்திருந்தன. அவற்றை சரியாக விடையளித்த மாணவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர்" என்று தெரிவித்தார்.

இது குறித்து தொழில் வழிகாட்டி ஜெயபிரகாஷ் காந்தி தெரிவிக்கையில்,"கடந்த ஆண்டு 195 அல்லது 196 மதிப்பெண் பெற்ற மாணவர் சேர்ந்த அதே கல்லூரியில், அதே படிப்பில் இந்த ஆண்டு 193 மதிப்பெண் பெற்ற மாணவரும் இடம் பெறலாம்.

அதாவது கடந்த ஆண்டு வாய்ப்பு கிடைக்காத மாணவர்களுக்கும் இந்த ஆண்டு நல்ல கல்லூரியில் சேரும் வாய்ப்பு அதிகரிக்கிறது. பொறியியல் மட்டுமின்றி கால்நடை மருத்துவம், மீனியல் போன்ற படிப்புகளுக்கான கட் ஆப்பும் 1 முதல் 3 மதிப்பெண் வரை குறையும் என்று கணிக்கப்படுகிறது.

பிஎஸ்சி வேளாண்மை படிப்புக்கான கட் ஆப்பும் 2 முதல் 4 மதிப்பெண் வரை குறையலாம் என்று தெரிவித்தார்.

உயிரியல் பாடத்தில் நூறு மதிப்பெண் பெற்றவர்களும் குறைந்துள்ளனர். தாவரவியலில் கடந்த ஆண்டு 269 பேர் சதம் பெற்றனர், இந்த ஆண்டு வெறும் 39 பேர் மட்டுமே பெற்றனர். விலங்கியலில் 36 இருந்தது 18 ஆக குறைந்தது. மாணவர்களுக்கு சில முக்கியமான அறிவுரைகள் என்னவென்றால்,. TNEA இணையதளத்தில் (tneaonline.org) கடந்த ஆண்டுகளின் கட் ஆப் மதிப்பெண்களை கவனமாக ஒப்பிட்டுப் பார்த்த பிறகே கல்லூரி விருப்பங்களை பதிவு செய்ய வேண்டும். அவசரப்பட்டு விருப்பங்களை பதிவு செய்யாமல், ஒவ்வொரு கல்லூரியின் கட் ஆப் போக்கையும் புரிந்துகொண்டு முடிவெடுக்க வேண்டும் என்று கல்வியாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்த ஆண்டு கட் ஆப் குறைவது, கடினமாக உழைத்தும் சில மதிப்பெண்கள் குறைந்துவிட்டதாக கவலைப்படும் மாணவர்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை அளிக்கிறது என்று கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM